
Laodicean Times

லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

தொகுப்பு13 தொகுதி 3 ஜூலை - செப்டம்பர் 2023



R 5517

## நாவை அடக்குவது அவசியமாகும்

## CONTROL OF THE TONGUE A NECESSITY

**“மனுஷர் பேசும் வீணான(பிரயோஜனமில்லாத அல்லது தீங்கு விளைவிக்கிற) வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” – மத்தேயு 12:36.**

நம் கர்த்தர், பரிசேயர் மற்றும் வேதபாரகர்கள் சிலரிடம் உரையாடிக்கொண்டிருந்தார். அவர்கள் “அவருடைய பேச்சிலே அவரை அகப்படுத்தும்படிக்கு” – பாஷையின் நுணுக்கமான வார்த்தைகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும்படிக்கு முயற்சி செய்து கொண்டிருந்தனர். அவரை எதிர்க்கும் அவர்களுடைய முயற்சியில், அந்த வேதபாரகர்களும் பரிசேயர்களும், அவருடைய பகுத்தறிவான வாதத்தில் அவரைத் தடைசெய்யவோ அல்லது தோற்கடிக்கவோ தங்களால் இயன்ற அனைத்தையும் செய்துகொண்டிருந்தனர் – தாங்களே நிஜமாக நம்பாத வாதங்களை அவருக்கு எதிராக உபயோகப்படுத்தும் அளவிற்குச் சென்றனர். இது மிகவும் ஆபத்தான ஒரு செயல்முறையாகும். ஒட்டுமொத்தமாக எவ்வளவுதான் நமது நோக்கம் நியாயமானதாக நமக்குத் தோன்றினாலும்சரி, உண்மை என்று நாம் நம்புகின்ற ஒன்றை நிலைநிறுத்தும் பொருட்டு, வார்த்தைகளை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது.

ஒருவேளை, அந்தப் பரிசேயர்கள் தங்களுக்–குள்ளாகவே, “நாம் அந்த நசரேயரைவிட பலமான வாதங்களை முன்வைக்கவேண்டும். அவர்தாமே பலமான பாஷையைப் பயன்படுத்துகிறாரே, கோழைத்தனமாக புறமுதுகு காட்டாமல், சர்ச்சையில் நமது தரப்பு வாதத்தை நாம் உயர்த்திப் பிடிக்கவேண்டும்” என்று கூறியிருக்கலாம். ஆனால் இந்த நிலைப்பாடு அவர்கள் நடந்துகொண்ட விதத்தைச் சரியென நியாயப்படுத்தவில்லை. நீதி, தேவனுடைய சிங்காசனத்தின் ஆதாரமாக இருப்பதால், எந்த வகையிலும் மற்றவரைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக ஏறெடுக்கப்படும் எந்தவொரு முயற்சியும் அதற்கே உரிய தண்டனையை நிச்சயமாகக் கொண்டுவரும்.

நாவைக் குறித்த பாடத்தில், நம் கர்த்தர் பல்வேறு சமயங்களில் தெரிவித்த கருத்துக்களை வைத்துப்பார்க்கும்போது, அவருடைய நாளில் அவர் தொடர்புகொண்டவர்களிடையே ஏதோவொரு தவறான நிலை தீவிரமாகக் காணப்பட்டிருக்கவேண்டும் என்பதாக நாம் உணர்கிறோம்.வேதபாரகர்களும் பரிசேயர்களும் அவரைப் பொல்லாத சக்தியென காரணங்காட்டி, அவர் சாத்தானுடைய கருவி – சாத்தான்தான் அவர் மூலமாகப் பேசுகிறான் என்றெல்லாம் தெரிவித்தனர். அவர்கள் தங்களைத்தாங்களே ஏமாற்றிக் கொண்டார்கள் என்று நமது கர்த்தர் பொதுவான முறையில் ஆரம்பத்தில் சொன்னார். பின்னர், அவர் அவர்களைக் கடுமையாகக் கண்டித்து, அவர்களுடைய வாதங்களின் தவறான தன்மையை எடுத்துக்காட்டினார். நமது ஆதார வசனத்துக்குத் தொடர்பானவகையில் அவர்களுடைய வார்த்தைகளினால் அவர்கள் கண்டிக்கப்படவேண்டும் – கையாளப்பட்டு, நீதியின்படி திருத்தப்பட்டு உண்மையான சீர்திருத்தத்திற்குக் கொண்டுவரப்படவேண்டும், இல்லையெனில்,இரண்டாம் மரணத்தில் அழிந்துபோக நேரிடும் என்று அவர் அறிவித்தார்.

**நாவின் வல்லமை**

மனித ஜீவிகள் மாத்திரமே பூமிக்குரிய ஒரே சிருஷ்டிப்புக்களாக, வாய்மொழியாகவோ அல்லது எழுத்தின் வாயிலாகவோ அல்லது வேறுவிதமாகவோ பேசமுடியும். நாவு ஒரு சிறிய அவயவமாக இருந்தபோதிலும், அதினுடைய மிகப்பரந்த செல்வாக்கினித்தமாக அது எல்லாவற்றிலும் மிகவும் ஆபத்தான ஒன்றாயிருக்கிறது என்று சொல்லுகிற அப்போஸ்தலனாகிய யாக்கோபின் வாக்கியத்தில் காணப்படுகிற ஞானத்தை, தேவனுடைய பிள்ளைகள்

## இம்மாத வெளியீட்டில்


| | | |
|---|---|---|
| . நாவை அடக்குவது அவசியம் | .... | 1 |
| .. அன்றாட சுயபரிசோதனை | .... | 6 |
| .. *கீழ்ப்படிதலால் உண்மைத்தன்மை நிரூபிக்கப்படும்* | .... | *9* |
| .. *மாபெரும் கற்பனைகள்* | .... | *10* |
| .. *பத்துக் கன்னிகைகள்* | .... | *13* |


*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

அதிகதிகமாக உணர்கிறார்கள். ஒருவன் தன் நாவினால் பாவம் செய்யாதிருப்பானாகில், அவன் பூரண புருஷனாயிருக்கிறான் (யாக்கோபு3:2). நம்முடைய வார்த்தைகளின் சாத்தியமான விளைவுகளை நம்மால் கணித்திடமுடியாது. இந்தத் தாக்கம் பூமியின் கடையாந்திரங்கள் வரைக்கும் சென்றடையலாம். ஆகவே, நம் வார்த்தைகள் தேவனை மகிமைப்படுத்துமா அல்லது அவரை அவமதிக்குமா, அவை மற்றவர்களுடைய மனங்களில் நல்ல எண்ணங்களையும் தூண்டுதல்களையும் தூண்டுமா அல்லது தீயதைத் தூண்டிடுமா என்பதையெல்லாம் தீர்மானித்து, நாம் என்ன சொல்லலாம் என்பதை கவனமாக சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

தேவன் தம்முடைய ஞானத்தில், இன்றைய நமது நடத்தை நாளைய நமது குணாதிசயத்துடன் அதிகம் தொடர்புடையதாக இருக்கும்படிக்கு நம்மை உருவாக்குவது பொருத்தமெனக் கண்டார். இவ்வாறு நாம் தொடர்ச்சியாக குணலட்சணத்தை உருவாக்கவோ அல்லது உடைக்கவோ செய்கின்றோம். இந்த உண்மையை அனைவரும் தெரிந்து கொள்வது நல்லது. உலகின் ஜனங்கள் மாத்திரமல்ல, கிறிஸ்தவர்களும் இந்தக் கொள்கையைப் புரிந்து கொள்ளவேண்டும். ஏனெனில் கிறிஸ்தவர்கள் இப்போது மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கான சோதனையின்கீழாக இருக்கின்றனர். எனவே, அவர்கள் தங்கள் வார்த்தைகளைக் கவனமாக எடைபோடுவதை புறக்கணிப்பதன் மூலமாக, தாங்கள் எந்த பந்தயப்பொருளுக்காக பிரயாசப்படுகிறார்களோ அந்த மாபெரும் பந்தயப்பொருளை இழக்கநேரிடும்.

**நியாயத்தீர்ப்பின் நாள்**

ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும் –ஒவ்வொரு பிரயோஜனமில்லாத சொற்களுக்கும் நியாயத்தீர்ப்பு நாளில் கணக்கு ஒப்புவிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்துவதன் வாயிலாக நமது கர்த்தர் தெரிவித்தார். திருச்சபைக்கோ, இந்த சுவிசேஷயுகமானது இந்த கணக்கு ஒப்புவிக்கும் நாளாக இருக்கின்றதென்று வேத வசனங்கள் போதிப்பதாகப் புரிந்துகொள்கிறோம். அநுதினமும் நாம் நமது பரமபிதாவிடம் சென்று, ''எங்களுக்கு விரோதமாக குற்றம் செய்தவர்களை நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்'' என்று ஜெபம் பண்ணவேண்டும். அநுதினமும் நாம் நமது கணக்கை ஒப்புவிப்பது மாத்திரமல்லாமல், நமது ஓட்டத்தின் முடிவிலும் ஒரு பொதுவான கணக்கு பார்க்கப்பட வேண்டியுள்ளது. இப்படிச் சொல்வதனால் நமது ஓட்டப்பந்தயத்தின் முடிவில், நாம் ஒவ்வொருவரும் வரிசையாக நிற்கவைக்கப்பட்டு, நம் அனுபவத்தின் ஒவ்வொரு வார்த்தையைக் குறித்தும் விசாரிக்கப்படுவோம் என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது. மாறாக சத்தியத்துடன் தொடர்பு கொள்ளும் ஒவ்வொருவருமே குணலட்சணத்தை உருவாக்கவோ அல்லது உடைக்கவோ செய்கிறார்கள். இப்படியாக ஒருவருடைய தகுதியைக் கண்டறியும் காலத்தின் முடிவில் அவருடைய குணலட்சணம் அவருக்கான வெகுமதியைத் தீர்மானிக்கும் என்பதாகப் புரிந்து கொள்ளவேண்டும். எவ்வாறு ஒரு மாணவன் அநுதினமும் தனது பாடங்களைக் கற்றுக்கொண்டு, ஆண்டின் இறுதியில் தனது அறிவுக்கான பொதுப்பரீட்சையாயுள்ள இறுதித்தேர்வுகளுக்குத் தன்னை ஆயத்தம் பண்ணிக்கொள்வானோ, அதுபோலவே கிறிஸ்துவின் பள்ளியிலுள்ள மாணவர்களும் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் நமது எஜமானர் நம்மை நடத்துகிறார் என்றாலும், நமது ஓட்டத்தின் முடிவில் நீதிபதியின்முன்பாக முழுகணக்குப் பார்க்கப்பட வேண்டியுள்ளது.

சந்தேகத்திற்கிடமின்றி, நம் ஒவ்வொருவரிலும், கர்த்தரால் ஏற்கப்படாத சில விஷயங்கள் இருக்கிறது. நாம் அனைவருமே புதிய சிந்தை எனும் பொக்கிஷத்தை இந்த மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறபடியால், நாம் விரும்பினபடி நம்மால் செய்யமுடியாதவர்களாக இருக்கிறோம். ஆனால் நாம் கர்த்தருக்கு ஊழியஞ்செய்வோம் என்றும், அவருடைய சித்தத்தைச் செய்வதில் உண்மையுள்ளவர்களாக இருப்போம் என்றும் வாக்களித்திருக்கிறோம். எனவேதான் அவர் நம்மை இப்போது கையாண்டுவருகிறார். அவ்வாறு செய்யும்போது. நாவானது நம்முடைய சரீரத்தின் மிக முக்கியமான அவயவமாக இருக்கிறது என்பதைக் குறித்தும், அதை பயன்படுத்துவதில் எவ்வாறு நாம் கவனமாக இருக்கவேண்டும் என்பதைக் குறித்தும் அவர் நம்மை எச்சரிக்கிறார். ஏனென்றால் இந்தச் சுவிசேஷ யுகத்தின் முடிவில், கணக்குகள் கொண்டுவரப்படும்போது, இறுதி முடிவின்போது நாவு ஒரு ஆதிக்கத்தை ஏற்படுத்தும். பிறகு நமது இரட்சகருடனான உடன் சுதந்திரத்துவம் எனும் மிக உயரிய கனத்துக்கு நாம் தகுதியானவர்களா – அல்லது அந்த வகுப்பாருக்கு வேலையாட்களாக இருப்பதற்குத் தகுதியானவர்களா அல்லது நாம் ஜீவனின் எந்தத் தளத்திலும் வாழ்வதற்குத் தகுதியற்றவர்களா என்பது தீர்மானிக்கப்படும்.

**அவதூறு குறித்த நமது கர்த்தருடைய மதிப்பீடு**

ஆனால் இப்போது நம்மிடம் கணக்குப் பார்க்கப்படுகின்றது. மற்றெல்லா அவயவத்தைக் காட்டிலும் நாவானது நம்முடைய இருதயங்களைமிகவும் துல்லியமாக பிரதிபலிக்கின்றபடியால், நாவு மிகவும் முக்கியமான அவயவம் என்று நமது கர்த்தர் அறிவிக்கின்றார். கை ஒரு நல்ல செயலைச் செய்யலாம். ஆனால் இருதயமோ கையிலிருந்து மிகவும் வேறுபட்டிருக்கக்கூடும். சொல்லப்போனால், கையானது இருதயத்தின் உண்மை உணர்வை வெளிப்படுத்தாமல் போகலாம். ஆனால் நாவானது உண்மையாகவே இருதயத்தில் என்ன இருக்கிறது என்று வெளிப்படுத்துவது உ றுதியே. எனவே நமது வார்த்தைகளாலேயே நாம் அனுதினமும் குணலட்சணத்தை வளர்க்கவோ சிதைக்கவோ செய்கிறோம்.

கசப்பான வார்த்தைகளை உமிழும் ஆவியொன்று இருக்கிறது. கர்த்தருடைய பார்வையில் இது கொலையாகும்.

இவ்வாறு யூத யுகத்தின் முடிவில் வேதபாரகர்களும் பரிசேயர்களும் நமது கர்த்தரைக் குறைகூறி, அவதூறாகப் பேசினார்கள். நியாயப்பிரமாணத்தைப் பற்றிய அவர்களின் அறிவிலிருந்து அவர்கள் தங்கள் செயல்களுக்கு பொறுப்பேற்கவேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருந்தாலும், அவர்கள் தங்கள் வார்த்தைகளால் நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்கிற உண்மையை அவர்கள் மதித்துணரவில்லை.

இதுபோலவே உலகத்தினுடைய நியாயத்தீர்ப்பு நாளிலும், அதாவது ஆயிரமாண்டு யுகத்திலும் இருக்கும். மனுக்குலம் தங்கள் நாவுகளின் கிரியைகளுக்காகப் பொறுப்பேற்க வேண்டியிருக்கும். ஆனால் இப்போது தீர்ப்பளிக்கப்படுவதைப்பார்க்கிலும் இன்னும் அதிக சாதகமான வாய்ப்பை அப்போது அவர்கள் பெற்றிருப்பார்கள். அவர்களுக்கு உடனடியாக தீர்ப்பை வழங்கும் வல்லமைகள்அப்போது கிரியை செய்யும். இதனால் அவர்கள் தங்கள் பாடங்களை விரைவாகக் கற்றுக்கொள்வார்கள். அவர்கள் பேசும் வார்த்தைகளுக்கு அவர்கள் பொறுப்பாளிகளாக இருப்பார்கள். "அறியாதிருப்பவர்கள் ... சில அடிகள் அடிக்கப்படுவார்கள். ஆனால் "அறிந்தும்" தங்கள் அறிவின்படி "செய்யாதவர்களோ" "அநேக அடிகள் அடிக்கப்படுவார்கள்".

**நாவிற்கான விசேஷித்த கடிவாளங்கள்**

தற்போது நியாயத்தீர்ப்பின்கீழாக இருக்கும் கர்த்தருடைய பிள்ளைகள், திடீர் சோதனையின் அழுத்தத்தில் மனக்கிளர்ச்சிக்கு ஆட்பட்டு. எஜமானவருக்குப் பிடிக்காததைக் கூற நேரலாம். ஆனால் நாம் சிந்திக்காமல் எதையும் பேசக்கூடாது என்பதைக் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் நமது வார்த்தைகளை எடைபோட கற்றுக்கொள்ளவேண்டும். நாம் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருப்பதால், சாத்தியமான சிறந்த ஊழியத்தை வழங்குவதற்கேதுவாக, நம்முடைய வழிகளில் எப்போதும் கவனம் செலுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம்.சரியானதைச் செய்வதற்கான நல்ல விருப்பமுடையோராக மாத்திரம் நாம் இல்லாமல், நம் நாவைக் கடிவாளமிட்டு அடக்க நாடவும் வேண்டும். நாம் நம் நாவின்மீது போடவிரும்பும் எந்த உறுதிமொழிகளானாலும், தீர்மானங்களானாலும், கட்டுப்பாடுகளானாலும் அவைகள் கடிவாளங்களாகக் கருதப்படலாம். அவைகள் மூலமாக நாம் தேவனுடைய சித்தத்திற்கு நம்மை முழுமையாகக் கீழ்ப்படுத்துவதில் உறுதியாக இருக்கிறோம்.

சாத்தானும் அவனுடைய பொல்லாத சேனையும் கட்டுப்படுத்தப்படாமல் இருக்கும்வரையில், கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு, அவர்களுடைய வழிகளைக் காத்துக்கொள்வது நல்லது. யார் தங்களை கர்த்தரிடம் ஒப்படைத்துள்ளார்களோ அவர்களைப் பாழாக்குவதற்கும், அவர்களுடைய வார்த்தைகளில் அகப்படுத்தும்படிக்கும், சாத்தானும் அவனுடைய தூதர்களும் முயன்றுகொண்டிருக்கிறார்கள். எனவே நாம் அவர்கள் முன்னிலையில் இருக்கும்போது. அவர்கள் நம்மைச் சிக்கவைக்காதபடிக்கு, நாம் விசேஷித்த கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும். சங்கீதக்காரன் சொல்வதுபோல, "துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன்"(சங்கீதம் 39 :1),

**அனைவருக்குமான முக்கியமானதொரு பாடம்**

ஒவ்வொரு தீங்கு விளைவிக்கிற வார்த்தைக்குமே மனிதர்கள் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்று நம்முடைய ஆண்டவர் அறிவித்திருந்தாலும், அவர் அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் உள்ள எண்ணங்களையே சுட்டிக்காட்டுகின்றார். இருதய மனப்பான்மையே அவருக்கு மனவேதனையை ஏற்படுத்தியது. வேதபாரகர்களும் பரிசேயர்களும் வெளிப்படுத்திய அவர்களுடைய இருதய மனப்பான்மையானது அவர்களுக்கே தீங்கு விளைவிக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கிடையில் மிகவும் நீதியுள்ளவர்களாக இருக்க கற்றுக்கொள்வதைப் பார்க்கிலும், மிக முக்கியமான காரியம் வேறெதுவும் இருக்காது. அன்பாகவும் கனிவாகவும் தயாளகுணத்தோடும் இருப்பது சரியானதுதான் என்றாலும், நீதியே குணலட்சணத்தின் அஸ்திபாரமாக திகழ்கின்றது.நீதியின் அடிப்படையில் இல்லாத சகல அன்பும் கருணையும், கர்த்தருக்குத் திருப்திகரமாகவோ, பிரியமானதாகவோ இருப்பதில்லை. ஒரு தேவப்பிள்ளை மற்றவர்களுடன் பழகும்போது,"என்னுடைய சக மனிதரிடமிருந்து, எதை நான் எடுத்துக்கொள்ள என்னை அனுமதிப்பார் ?" என்று சிந்திக்க மாட்டார், மாறாக, "மற்றவர்களின் உரிமைகள் என்ன, என்னுடைய பரமபிதா நான் என்னசெய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்" என்றே சிந்திப்பார்.

எந்தவொரு விஷயத்திலும், ஒருவர் தனது சொந்த உரிமைகளை புரிந்துகொள்வது மிகவும் இயல்பானதே. ஆனால் விழுந்துபோன சுபாவமோ மற்றவர்களின் உரிமையை அவ்வளவு விரைவாக உணர்ந்துகொள்ளாது. ஆகவே, கர்த்தருடைய ஜனங்கள் கற்கவேண்டிய மிக முக்கியப்பாடங்களில் ஒன்று, மற்றவர்கள் தங்களுக்கு எவைகளைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அவைகளை அவர்களும் மற்றவர்களுக்குச் செய்யவேண்டும் என்பதாகும் – இதுவே எளிமையான நீதியாகும்.

புதிய சுபாவத்தை ஆளுகைசெய்யும் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவது என்பது, மற்றெல்லாரிடத்திலும் தங்களுடைய தரப்பிலிருந்து "பொன்னான பிரமாணத்தை" கைக்கொள்வதை முற்றிலுமாக அர்த்தப்படுத்துவதை, கர்த்தருடைய பிரியமான ஜனங்களில் அநேகர் முழுமையாக உணரவில்லை என்று நாங்கள் ஐயப்படுகிறோம். மற்றவர்கள் தங்களுக்கு எவைகளைச் செய்யக்கூடாதென்று விரும்புகிறார்களோ, அவைகளை அவர்களும் மற்றவர்களுக்குச் செய்யக்கூடாது. ஒவ்வொரு

செயலிலும், வார்த்தையிலும், முடிந்தவரை ஒவ்வொரு எண்ணத்திலும், நீதி ஆளுகைசெய்யும் வகையில் சரீரத்தைக் கீழ்ப்படுத்தச் செய்வது புதிய சிருஷ்டியின் கடமையாகும். ஒருவர் தனது நடவடிக்கைகளில் நீதியாக இருப்பதற்கு முன்பாக, முதலில் அவர் தனது எண்ணங்களில் நீதியாக இருக்கவேண்டும். எவர் அநியாயமாக நினைக்கிறாரோ, அவர் என்னதான் நீதியாக நடக்க முயற்சிசெய்தாலும்கூட, அவர் அநியாயமாகவே நடந்துகொள்வார்.

**நம்முடைய இருதயங்களில் சேமித்துவைக்கப்பட்டுள்ள பொக்கிஷம்**

நமது கர்த்தருடைய தனிப்பட்ட பரிசோதனையின் கீழாக, தெய்வீக நியாயத்தீர்ப்பு மன்றத்தின் முன்பாக திருச்சபையானது நின்றுகொண்டிருக்கிறது என்பதையும், அவருடைய மதிப்பீட்டில் நமது வார்த்தைகளும்கூட நியாயத்தீர்ப்பின் ஓர் அளவுகோலாக இருப்பதை நாம் நினைத்துப்பார்க்கும்போது, அவர் எந்த அடிப்படைக் கொள்கைகளைக்கொண்டு தம்முடைய முடிவை எடுப்பார் என்பதை நாம் மிகவும் கவனமாக எடைபோடமுடியாது. இருதயம், வாய் என இரண்டும் விசேஷித்த கண்காணிப்பின் கீழாக இருப்பதை, மத்தேயு12:34–36 ல் பதிவுசெய்யப்பட்டுள்ள நமது கர்த்தருடைய வார்த்தைகள்குறிக்கின்றன. ஆகவே, நம்முடைய வாயின் வார்த்தைகள் நம்முடைய கர்த்தரும் மீட்பருமானவருக்குப் பிரியமாய் இருக்கத்தக்கதான, சரியான இருதய நிலையைக் கொண்டிருப்பது எவ்வளவு அவசியமானதாய் இருக்கின்றது!

நமது கர்த்தருடைய கூற்றின்படி, இருதயமானது குணலட்சணத்தின் பிரதிநிதியாகவும், வாயானது அந்தக் குணலட்சணத்தின் குறியீடாகவும் இருக்கின்றது. இருதயம் எனும் வார்த்தையானது, சில சமயங்களில் வேத வாக்கியத்தில் சிந்தை என்கிற வார்த்தையின் அழுத்தத்துடன் பயன்படுத்தப்படுகின்றது. சிந்தையின் நிறைவினால் வாய் பேசுகிறது. நல்ல மனுஷன் அவனுடைய சிந்தையாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான். ஆனால் எல்லா மனிதர்களும் இயல்பிலேயே பாவிகளாக இருக்கின்றார்கள் ; எனவே அனைவருமே இயல்பாகவே ஓரளவு தீயவர்களாக இருக்கின்றோம். மரணதண்டனையின் கீழாக உள்ள எவரையும் தேவன் ஏற்பதில்லை. ஆயினும்கூட, ஆதாமின் கண்டனம் செய்யப்பட்ட சந்ததியைச் சேர்ந்தவர்களில், அவர்கள் அபூரணங்களோடு பிறந்திருந்தாலும், ஒப்பீட்டளவில் நல்லவர்களும் இருக்கிறார்கள். தங்களிடம் விழுந்துபோன சுபாவத்தின் கறைகள் காணப்பட்டாலும்கூட, முற்றிலும் நல்லவராக இருக்கின்ற ஒருவருடன் இசைவாக இருப்பதற்கு அவர்கள் வாஞ்சிக்கிறார்கள்.

முழுமையான சீர்கேடு என்ற உபதேசத்தை ஆதரிக்கும்படியாக – மனுக்குலத்தில் நன்மையானது ஒன்றுமில்லை என்பதைக் குறிக்கும் வண்ணமாக – வேத வாக்கியத்தில் நாம் எதையும் காண்பதில்லை. ஒருவர்கூட பரிபூரணர் இல்லை என்றாலும், குறைந்தபட்சம் ஒரு நல்ல எண்ணம், நல்நோக்கங்கள் கொண்ட சிலர் இருக்கிறார்கள். பூர்வ காலத்தில் இத்தகைய உயர்ந்த குணலட்சணங்கள் ஆபேல், ஏனோக், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, இஸ்ரயேலின் தீர்க்கதரிசிகள் போன்ற முற்பிதாக்களில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டன. இவர்கள் தேவனுக்கான தங்கள் கீழ்ப்படிதலையும், நீதியின் கொள்கைகளுக்கான தங்கள் உண்மைத்தன்மையையும் முழுமையாக வெளிப்படுத்தினார்கள்.

**தேவனால் அங்கீகரிக்கப்பட்ட வகுப்பார்**

இந்த சுவிசேஷயுகத்திலும், சில நல்லவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். புறஜாதிகள் மத்தியிலும், அதோடு, கிறிஸ்தவ தேசங்களிலும் நல்ல எண்ணம் கொண்டவர்களாயும், நல்நோக்கம் உடையவர்களாயும், தீங்கிழைக்காதவர்களாயும், தவறு செய்வதற்கு முயலாமல், சரியானதைச் செய்வதற்கு முயற்சிப்பவர்களாயும் இருப்பவர்கள் இருக்கிறார்கள். இருப்பினும், இந்த யுகத்தில் தெய்வீக அங்கீகாரத்தைப் பெறவேண்டுமானால், அவர் இயேசுவின் மூலமாக பிதாவிடம் வருபவர்களில் ஒருவராக இருக்கவேண்டும். மற்றவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. யாருடைய இருதயம் நேர்மையற்றதாயுள்ளதோ, யாரிடம் நல்நோக்கங்கள் காணப்படுவதில்லையோ, யார் தேவனுக்கும் நீதியின் கொள்கைகளுக்கும் நேர்மையை வெளிப்படுத்தாதிருக்கிறாரோ அவரைப் பிதாவானவர் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

ஆகவே தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர், பரிசுத்தஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டவர் என்று எவரையேனும் நாம் நம்புவதற்குக் காரணமிருக்குமேயானால், அவர் இனிமேல் ‘‘மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாக’’ (எபே2:3) கருதப்படுவதில்லை, மாறாக விசுவாச வீட்டாராகவே கருதப்படுகிறார்கள். அவர்களிடம் உள்ள மாம்சத்தின் பலவீனங்களைப் புறக்கணித்து பார்க்கும்போது, அவர்கள் இருதயத்தில் நல்லவர்களாய் இருக்கிறார்கள். இல்லையெனில் தேவன் அவர்களை ஏற்றுக்கொண்டிருக்கமாட்டார். இவர்களுக்குள் புதிய சித்தத்திற்கும் மாம்சத்தின் இச்சைகளுக்கும் இடையே ஒரு நிலையான போராட்டம் காணப்படுகிறது,

இருதயத்தில் நல்லவர்களாக இருபபவர்களைப்பற்றி நாம் கருத்தில் கொள்ளும்போது, அவர்கள் அனைவருமே அபூரண சரீரங்களைக் கொண்டிருப்பதையும் – சிலர் மற்றவர்களைவிடவும்அதிகமான அபூரணத்தைக் கொண்டிருப்பதையும் நாம் காண்கிறோம். பரிபூரணமாகச் செய்ய முடியவில்லையே என்கிற காரணத்திற்காக பந்தயப் பொருளுக்கான போராட்டத்தை நாம் கைவிடலாமா ? கூடாது! மாம்சத்தை அல்ல, இருதயத்தையே பார்ப்பதாக கர்த்தர் நமக்கு உறுதியளிக்கிறார். நம் கர்த்தராகிய இயேசுவின் மூலம் அவர் மிகவும் கிருபையுள்ள ஏற்பாட்டைச் செய்துள்ளார். அதன்மூலம் அபூரணங்கள் சுத்திகரிக்கப்படுகின்றன. ‘‘அவருடைய

குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்'' (1யோவா1:7) ஆகவே அவருடைய பிள்ளைகள் அனைவரும், இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவார்களாக.

**சிப்ஸ் அல்லது ஆப்பிள் – எதுவேண்டும் ?**

ஒரு நல்ல மனுஷனுடைய இருதயமாகிய பொக்கிஷத்திலிருந்து வெளிப்படும் நல்ல விஷயங்கள், அவன் அவ்வப்போது சேமித்து வைத்திருக்கும் விஷயங்களாக இருக்கின்றன.தேவபக்தியுள்ள மனுஷனைப்பற்றி சங்கீதக்காரன் பின்வருமாறு கூறுகின்றார்: '' அவர் ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவர், அவரது சட்டத்தைப்பற்றி இரவும் பகலும் சிந்திப்பவர்''(சங்1:2). மேலும் அவர் தன்னைப்பற்றியும் பின்வருமாறு கூறுகின்றார்(சங்119:148) ; ''உமது வசனத்தை(நியாயப்பிரமாணம், கட்டளைகள்– அதன் ஆவி, நியாயப்பிரமாணத்தின் நோக்கம், வெளிப்புற வடிவம் மாத்திரமல்ல) தியானிக்கும்படி குறித்த ஜாமங்களுக்குமுன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும்(எதிர்பார்த்திருக்கும்)''. எனவே தேவன் கொடுத்த நியாயப்பிரமாணத்தின் ஆவியை நாம் தியானிக்கவேண்டும். ஒவ்வொரு பாடத்திலும், தெய்வீகச் சிந்தை அதன்மீது என்னவாக இருக்கின்றது என்பதை முடிந்தவரைக்கும் புரிந்துகொள்ளுவதற்கான வாஞ்சையே நம்முடைய இருதயத்தின் உள்ளுணர்வாக இருக்கவேண்டும். தேவனுடன் இசைவாக இருப்பதற்கும், அவருடைய குணலட்சணத்தின் சாயலை அடைவதற்கும் ஆர்வமுள்ள அனைவரும் நன்மையுள்ளவைகளை, கற்புள்ளவைகளை, பரிசுத்தமுள்ளவைகளைக் குறித்தே சிந்திப்பார்கள் – பிலிப்பியர்4:8.

ஒருவர் நல்லவைகளைக் குறித்து சிந்திக்கும்போது, மனதானது நன்மையானவைகளால் நிரப்பப்படும். எங்கெல்லாம் தீமையுள்ளவைகளைக் குறித்து பேசுவதற்கு ஒரு வாய் முற்படுகின்றதோ, அங்கெல்லாம் ஒரு தீமையான மனப்பான்மையே காணப்படுகின்றது. அதாவது தீமையைச் சேர்த்துவைத்திருக்கும் ஒரு சிந்தையே காணப்படுகின்றது. ஒருவர் மனதில் எதைச் சேமித்து வைத்திருக்கிறாரோ அதுவே உச்சத்தில், மேலே இருக்கும். நிச்சயமாக அதுவே வார்த்தைகளாகவும் வெளிப்படும். என்னதான் மறைக்க முயற்சித்தாலும், ஒரு பொல்லாத பொக்கிஷம் தன்னை வெளிப்படுத்திவிடும்; அதுபோலவே ஒரு நல்ல பொக்கிஷமும் தன்னை வெளிப்படுத்திவிடும்; ஏனெனில் சிந்தையினால் ஒரு குறிப்பிட்ட அளவினை மாத்திரமே தக்கவைக்கமுடியும் – லூக்கா 6:45.

ஒரு அப்பா தனது மகன் ஒரு நாவலைப் படித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தார். தன் மகனுக்கு இந்த வழியில் படிக்கும் பழக்கம் இருப்பது அவருக்குத் தெரியும். பையனை அழைத்து, ''ஜான், அந்தக் கூடையிலிருக்கும் ஆப்பிள்களை எடுத்துவைத்துவிட்டு, பின்னர் அக்கூடையை மரஅறைக்கு எடுத்துச்சென்று, அதில் சிப்சை நிரப்பிக்கொண்டு வா'' என்று கூறினார். மகனும் அப்பா சொன்னபடியே செய்தான். அவன் திரும்பி வந்ததும், அப்பா அவனிடம், ''இப்போது ஆப்பிள்களை அக்கூடையில் வை'' என்று கூறினார். சிப்ஸ் மற்றும் ஆப்பிள் இரண்டிற்கும் கூடையில் போதுமான இடம் இல்லாத காரணத்தால், அதனை தன்னால் செய்யமுடியாது என்றவாறு மகன் பதிலளித்தான். அப்போது அப்பா, ''அதைத்தான் நீயும் உன் சிந்தையில் செய்யவிருந்தாய். நீ உன்னுடைய சிந்தையை சிப்சால் நிரப்பிக்கொண்டிருக்கிறாய், மேலும் நீ அதில் ஆப்பிள்களை வைக்க முயற்சிசெய்தாயானால், அதற்கு இடமில்லாமற்போகும்''. இப்படியாகத்தான் நம் அனைவருடனும் இருக்கிறது. நகைச்சுவைகள், முட்டாள்தனமான வார்த்தைகள் போன்றவற்றால் நம்முடைய சிந்தைகளை நிரப்பினோமேயானால், அவற்றை பரிசுத்தஆவியின் காரியங்களை நம்மால் நிரப்பமுடியாது – எபேசியர்5 :1–7.

கர்த்தருடைய ஜனங்களில் அநேகர், தங்கள் இருதயம் நன்றாகவே இருக்கின்றதையும், ஆனால் தங்களுடைய மாம்சத்தில் நன்மையானதல்லாத சில விஷயங்களில் ஒரு மனப்பான்மை இருப்பதையும் காண்கிறார்கள். சொல்லப்போனால். இவ்வாறு சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பொக்கிஷம் சிப்ஸாக இருக்குமா அல்லது ஆப்பிளாக இருக்குமா என்பதில் மாம்சத்துக்கும் ஆவிக்கும் இடையே தொடர்ச்சியான போராட்டம் ஒன்று நடந்துவருகிறது. எதைக்கொண்டு தன் சிந்தையை நிரப்புவது என்பதை ஒவ்வொரு புதிய சிருஷ்டியும் தீர்மானிக்கவேண்டும். அவர் எந்த வகையான சமுதாயத்தைத் தேர்ந்தெடுப்பார், எங்கு செல்வார், எதைப் படிப்பார், என்ன வகையான ஆதிக்கங்களின் கீழாக வருவார், எந்த வகையை எதிர்க்கவேண்டும், முதலியவற்றை அவர்தான் தீர்மானிக்கவேண்டும். கடந்த காலத்தில் அவர் பொல்லாதவைகளைப் பொக்கிஷமாக எதையாவது சேர்த்து வைத்திருந்தால், இப்போது அவற்றை அவராகவே அகற்ற முயற்சிக்கவேண்டும். அவருடைய சிந்தை, கேலிகள், மற்றும் அற்பத்தனத்தால் நிரப்பப்பட்டிருந்ததேயானால், தேவப்பிள்ளைக்குப் பொருந்தாத விஷயங்களால் நிரப்பப்பட்டிருந்ததேயானால், அவர் அவைகளையெல்லாம் தூக்கி எறியவேண்டும்.

**குணலட்சணம் எவ்வாறு கட்டமைக்கப்படுகிறது**

இறுதியாக, நம்முடைய சிந்தையில் ஒரு நல்ல பொக்கிஷத்தைச் சேர்த்துவைப்பதற்கும், ''பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷத்தைச் சேர்த்துவையுங்கள்''(மத்6 :20) என்று நம்முடைய கர்த்தர் கூறியதற்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது. நம்முடைய சிந்தைகளிலும் இருதயங்களிலும் பொக்கிஷங்களைச் சேமித்து வைப்பதன்மூலமாக, நாம் குணலட்சணத்தைக் கட்டமைக்கின்றோம். ஒரு மனிதருடைய வீட்டிற்குள் சென்று, அவர் என்னென்ன பொக்கிஷங்களைச்

சேர்த்துவைத்துள்ளார் என்பதை ஒருவர் பார்க்கநேர்ந்தால், அந்த மனிதனின் சிந்தை எத்திசையில் சாய்ந்திருக்கிறது என்பதை எளிதில் உணர்ந்துகொள்ளமுடியும். அவரது விருப்பத்தேர்வுகள் அவரது குணலட்சணத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றன. இவ்வாறுதான் நம் அனைவரிடையேயும் உள்ளது. நாம் அபிவிருத்திசெய்யும் விஷயங்கள் நமது குணாதிசயத்தைக் காட்டும் ஒரு குறியீடாக(index) உள்ளது.

புதிய சிருஷ்டிகளாக நாம் நம்முடைய கணக்கை ஒப்புவிக்கும்போது, கர்த்தருடைய தெரிந்துகொள்ளப்பட்ட சிறுமந்தைக்குப் பாத்திரவான்களாக கருதப்படுவோமா என்பதை குணலட்சணமே தீர்மானிக்கும். நம்முடைய முன்மாதிரியாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்போன்ற ஒரு குணலட்சணத்தைச் சேர்த்து வைத்தவர்கள் மட்டுமே பரலோகராஜ்யத்தில் ஒரு சுதந்திரத்தை அடைவதற்குத் தகுதியானவர்களாக இருப்பார்கள். ஆகவே நமது நித்திய முடிவானது, நாம் இப்போது நம்முடைய சிந்தைகளை எவ்விதத்தில் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொருத்தும், நாம் இப்போது சேர்த்துவைக்கும் எண்ணங்களைப் பொருத்துமே தீர்மானிக்கப்படப்போகிறது. எவர் நல்ல எண்ணங்களை அபிவிருத்தி செய்கிறாரோ, அவர் தற்கால ஜீவியத்தில் மாத்திரமல்ல, வருங்காலம் முழுவதுமே ஆசீர்பெறுவார்.

அப்படியானால் நமது முதல் அக்கறை, இருதயத்தின் மீது இருக்கவேண்டும். அதாவது நமது இருதயத்தின் நாட்டங்களும், மனப்பான்மைகளும் முற்றிலும் தெய்வீகக் கிருபையின் கட்டுப்பாட்டின் கீழாக இருப்பதற்காகவும், சத்தியம் மற்றும் நீதியின் ஒவ்வொரு கொள்கையும் அங்கே சிங்காசனத்தில் அமர்த்தப்படுவதற்காகவும், நீதி, இரக்கம், தயாளம், சாந்தம், இச்சையடக்கம், விசுவாசம், சகோதரசிநேகம், அன்பு, தேவன் மற்றும் கிறிஸ்துவின் மீதான உயரிய பயபக்தி, சகல பரிசுத்த அலங்காரத்தின் மீதான ஒரு ஊக்கமான அன்பு ஆகியவை, வாழ்க்கையை ஆளுகின்ற கொள்கைகளாக உறுதியாக நிலைநிறுத்தப்படவேண்டும், இந்தக் கோட்பாடுகள் இருதயத்தில் நிலைநிறுத்தப்பட்டால், நம்முடைய நாவைக் கட்டுப்படுத்துவதில் நமக்கு சிரமமும் இருக்காது. ஏனென்றால், நம்முடைய இருதயமெனும் நல்ல பொக்கிஷத்திலிருந்து வாயானது சத்தியம், நிதானம், ஞானம் மற்றும் கிருபையின் வார்த்தைகளை எடுத்துப் பேசும்.

———————

**R 5519**

## அன்றாட சுயபரிசோதனை செய்வதன் முக்கியத்துவம்

### THE IMPORTANCE OF DAILY SELF-SCRUTINY

**“நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதபடிக்கு கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்” – 1கொரிந்தியர் 11 :31,32**

கிறிஸ்தவர்களாக நாம் நம்மையே முறையாக நிதானித்தறிந்தோமானால், நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போமானால். நம்மையே சரிசெய்துகொள்வோமானால், கர்த்தர் தம் கரங்களில் நம்மை எடுத்து நமக்கு நியாயத்தீர்ப்புகளை அளிக்கவோ அல்லது குறைகண்டு நடுநிலை மதிப்பீடு செய்யவோ அவசியமிருக்காது என்று திறவுகோல் வார்த்தைகளில் அப்போஸ்தலர் கூறுவதாகக் காணப்படுகிறது. ஆனால் இந்த நிதானிப்பை அல்லது நம்மிடமுள்ள குறைகண்டு நடுநிலைமதிப்பீட்டை செய்யத் தவறுவோமானால், கர்த்தர் அதை செய்வது அவசியமாகிவிடும். ஏனெனில் அவர் நம்மை அவருடைய குடும்பத்தில் சேர்த்துக்கொண்டு, நம்மை புத்திரர்களாக ஆக்கியுள்ளார். நாம் அவரது குமாரனுடைய பள்ளியில் பயிலுகிறோம், நம் மூத்த சகோதரராகிய அவரால் பயிற்றுவிக்கப்பட்டு, அறிவுறுத்தப்பட்டு வருகிறோம். இது நம்முடைய நியாயத்தீர்ப்பின் நாள்.

கர்த்தருடைய தரப்பிலான இந்த சிட்சையின் நோக்கமானது, நம்மீது தம் வெறுப்புணர்ச்சியை வெளிப்படுத்தி, நமக்கு வலியை ஏற்படுத்துவதல்ல. மாறாக, அப்போஸ்தலர் குறிப்பிடுவதுபோல, “நாம் உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதபடிக்கு..”. தேவனுடைய வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள கொள்கைகளாகிய நீதி, கருணை, இரக்கம், அன்பு இவற்றின்மூலம் நாம் நம் சொந்த நடக்கையை, நம் சொந்த வார்த்தைகளை, நம் சொந்த எண்ணங்களை நாம் திறனாய்வு செய்யும்பொழுது நம்மை நாம் நிதானிக்கிறோம். நம் ஆண்டவர் நமக்கு புத்திமதி கூறுவதுபோல், நாம் தவறு செய்திருப்பதை நாம் கண்டோமானால், நம் காணிக்கையை பலிபீடத்தின்மீது வைத்துவிட்டு, நாம் வார்த்தைகளாலோ, கருணையற்ற செயல்களாலோ அல்லது முரட்டுத்தனமாக நடந்தோ காயப்படுத்தியிருப்போமானால், அவரிடம் சென்று மன்னிப்புக்களை கோருதல்வேண்டும். அதன்பின்பு திரும்பிவந்து, நம் காணிக்கையை செலுத்தலாம்.

இப்படிப்பட்ட நடைமுறை, ஒருவரை வற்புறுத்தி, சரியானதைச்செய்ய அவரை கட்டாயப்படுத்தும். “நான் தவறுசெய்துவிட்டேன் என்று நான் அறிவேன், அப்படி நான்

செய்திருக்கக்கூடாது, ஆனால் நான் அபூரணன். ஒவ்வொரு காரியத்திலும் சரியானது எது என்று கண்டு, நீதியாகச் செய்ய என்னால் முடிவதில்லை'' என்று ஒருவர் கூறுவது போதுமானதல்ல. இந்த நடைமுறையானது நம் திறவுகோல் வசனத்தின் ஆவிக்கு இசைவாக இருக்காது. நாம் தவறு செய்வோமானால், நம் சிறந்த ஆற்றலைப் பிரயோகித்து அதை சரிசெய்வதற்கான பரிசுத்தமான கடமையை நாம் பெற்றிருக்கிறோம் என்றே நம் திறவுகோல் வசனம் காண்பிக்கிறது. நாம் பிறருக்கெதிராக அன்பற்ற சிந்தையைக் கொண்டிருப்போமானால், அந்த நபரிடம் நேரடியாகச்சென்று இதைக்கூறவேண்டிய அவசியமில்லை. அவ்வாறு செய்வோமானால், காரியத்தை நாம் மோசமாக்குவோம். இவ்விஷயத்தில் நம்மைநாமே நிதானித்து, முழுமையாக சீர்செய்யவேண்டும். நாம் நிலைத்து நிற்கக்கூடிய ஒரு நல்ல பாடத்தை நமக்குநாமே கொடுக்கவேண்டும். இவ்வாறு நாம் இருதயத்திலும், உள்நோக்கத்திலும் சரியாயிருந்து, கர்த்தரது அங்கீகாரம் பெறுவோம்.

**பிறரிடத்திலான முறையான நடைமுறை**

நாம் நம் எண்ணங்களையும், வார்த்தைகளையும், செயல்பாடுகளையும் கவனமாக ஆராயவேண்டும் என்பது நம்மைக்குறித்த கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது என்று நாம் புரிந்துகொள்கிறோம். நம் நாவினாலோ அல்லது வேறு எவ்விதத்திலோ மற்றவர்களை காயப்படுத்தியிருப்பதை கண்டோமானால், நாம் பேசிய அந்நபரிடத்தில் சென்று முறையான மன்னிப்பைப்பெற்று, அதை சரிசெய்யவேண்டும். அதை நாம் எப்பொழுதும் மறவாடிபடிக்கு நம் மீதே தண்டனையை சுமத்திக் கொள்ளவேண்டும். அத்தண்டனைக்கு குறிப்பிடத்தக்கஅளவு தாழ்மை தேவைப்பட்டால் மிகவும் சிறந்ததாக இருக்கும். நம்மை நாமே தண்டிக்க அலட்சியம் காண்பிப்போமாகில், நாம் முறையான நிலைமையில் இல்லை என்பதை இது காண்பிக்கும். இந்நிலையில் நமக்காக கர்த்தர் செய்யக்கூடிய நன்மையான காரியம் ஒரு கடினமான சிட்சையை நமக்குக் கொடுப்பதேயாகும். இது ஒரே நாளில் அல்லது வாரத்தில் அல்லது மாதத்தில் வராதிருக்கலாம். ஆனால் நாம் அக்காரியத்தில் சரியானதைச் செய்யவில்லையெனில், கர்த்தர் தம் கரத்தில் நம்மை எடுத்துக்கொள்ளும் இடத்திற்கு நாம் வருகிறோம் என்பதில் நாம் உறுதியாயிருக்கலாம். அவ்வாறு அவர் செய்வாராகில், சில சோதிக்கும் அனுபவங்களை அவர் நமக்குத் தருவார். அதாவது, யாரோ ஒருவர் நமக்கு இரக்கமற்ற சில காரியங்களை செய்யலாம், அல்லது நம்மைக்குறித்து தீமையான சிலவற்றைப் பேசலாம், இவைகளை கர்த்தர் அனுமதிக்கக்கூடும். அல்லது ஒரு நிலைமைக்கு செல்ல அவர் அனுமதிக்கக்கூடும், சிலவகையான தண்டனையை நம்மீது வரப்பண்ணும்.

அடுத்த யுகத்தில் உலகம் நியாயத்தீர்ப்புக்குள் அல்லது சோதனைக்குள் செல்ல இருக்கிறது. நாம் உலகிற்குரியவர்களாயிருந்தால், நம் தனிப்பட்ட நியாயத்தீர்ப்பு தற்போதைக்கு பதிலாக பிற்பாடு நம்மீது வரும். நம் குணாதிசயத்தின்மீது குறியீடுகளை ஏற்படுத்திக்கொண்டு, அடுத்த யுகத்தில் அதற்கான அடிகள் தேவையாயிருக்கும். ஆனால் நாம் சபை வகுப்புக்குரியோராக இருந்தால், நாம் நம் நியாயத்தீர்ப்புக்களையும் தண்டனைகளையும். தற்காலத்திலேயே நிச்சயமாக அடைந்தாகவேண்டும். அவற்றை நமக்கு நாமே கொடுக்கத் தவறுவோமானால். நம் குரு நமக்கு அளிப்பார். "...நீங்கள் காலத்துக்கு முன்னே யாதொன்றைக் குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்..'' என்று மற்றொரு வேதவசனம் கூறுகிறது(1கொரிந்4:5). இவ்வசனம், நமக்குநாமே நியாயத்தீர்ப்பு செய்வதைப்பற்றி குறிப்பிடுவதில்லை. நம் சொந்த விஷயங்களில் தீர்ப்பிடும் உணர்வில் நமக்குநாமே நிதானிக்கமுடியாது. ஆனால் நம் நடத்தையையும் நம் வார்தைகளையும், நம் எண்ணங்களையும், பிறருக்கெதிரான நம் சொந்த அலட்சியங்கள் மற்றும் நம் குற்றங்களில் நமக்குநாமே கையாள்வதையும் கவனமாக கண்காணிக்கவேண்டும். ''அவர்களுடைய கனிகளால் அவர்களை அறிவீர்கள்'' என்று இயேசு கூறினார். இந்த கனிதரும் ஜீவியத்தை நம் சொந்த விஷயத்திலும், நம் சகோதரர்கள் மற்றும் நம் அயலார்களாகிய மற்றவர்களிடத்திலும் நாம் கவனிக்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும். நம் சொந்த சிந்தைகளில் தீய செயல்கள் மற்றும் தீய வார்த்தைகளை நாம் நிதானிக்கவும். நிராகரிக்கவும் வேண்டும். இது சரியா அல்லது தவறா என்று நாம் கேட்டு, அப்படிப்பட்ட விஷயங்களில் எவ்வேளையிலும் நாம் நிதானிக்கவேண்டும்.

**தீர்ப்பிடுவது நமக்குரியதல்ல**

கர்த்தருக்குப் பிரியமில்லாத அநேக பெரிதான காரியங்களை நம் வாழ்வில் ஒவ்வொரு நாளும் காண்கிறோம். மற்றவர்கள், இழிவான பேச்சை அல்லது முறையற்ற மொழியைப் பயன்படுத்துவதை நாம் கேட்கிறோம். கொடூரம் அல்லது அநீதியின் செயல்பாடுகளை நாம் காண்கிறோம். ஆகவே இக்காரியங்களை நம் வாழ்வில் சந்திக்கும்போது நம்மால் நிதானிக்கமுடிகிறது. அவற்றிலிருந்து பாடங்களையும் பெறுகிறோம். இக்காரியங்களை செய்த ஜனங்களை நாம் நியாயந்தீர்க்கவேண்டும் என்பதோ, அவர்கள் எவ்வகையான தண்டனையைப் பெறுவார்கள் என்று தீர்மானிப்பதோ இதன் பொருளாகாது. அவ்வாறு செய்வதற்கு நமக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை, அதற்கு நாம் தகுதியானவர்களுமல்ல. தேவ வார்த்தை தெளிவாகக்கூறுகிறபடி நாம் நிதானிக்கவேண்டுமே தவிர, இருதய நிலைமையின்படி நாம் நியாயம் விசாரிப்போராக இருக்கக்கூடாது. வெளித்தோற்றத்தில் காணப்படுபவை அநேக சமயங்களில் வஞ்சிக்கும் தன்மையுடையவை. அவைகள் தோற்றமளிப்பதுபோலவே எப்பொழுதும் இருப்பதில்லை.

உலகின் நியாயாதிபதிகளாக நாம் நியமிக்கப்படும் காலம் வரும். ஆனால் இந்த நேரம் தற்போது அல்ல. வருங்காலத்துக்கான நம் பணியை, நம் சிந்தைகளிலோ அல்லது

நம் வார்த்தைகளாலோ நாம் எதிர்நோக்காதிருக்கவேண்டும் என்று கர்த்தர் நமக்குக் கூறுகிறார். அதோடுகூட. நாம் எதைக் காணலாம், எதைக் கேட்கலாம் என்று பிறருக்கு நாம் ஒப்பிக்கக்கூடாது, அது பிறர் தங்களை தாழ்வானவர்களாக காண்பிக்கும்படி நேரிடும். காப்பாற்றும்பொருட்டு ஒருவேளை பேசநேரிடினும், கடமையின்பொருட்டு செய்வதாயிருக்கும். பிறரைக்குறித்து நியாயந்தீர்த்து, இக்காரியத்தைக் குறித்து நாம் என்ன நினைக்கிறோம் என்று சுற்றிலுமுள்ளோரிடம் கூறுவோமானால், கஷ்டக்காலத்தை அடைந்து, அதிகப்படியான தீங்குகளை செய்கிறவர்களாயிருப்போம். இவ்வாறு கர்த்தருடைய நீதியான கண்டனத்துக்குட்பட்டு. அவருடைய கடிந்துகொள்ளுதலை நமக்குக் கொண்டுவரும்.

நல்ல மரம் நல்ல கனியைக் கொடுக்கும் என்ற கர்த்தரின் வார்த்தைகளிலுள்ள சத்தியத்தை நாம் மதிப்பிடுகின்றபோது, அநேக சமயங்களில் சில குறிப்பிட்ட நபர்களது நடக்கை தவறாக இருப்பதை நாம் காணும்போது, அப்படிப்பட்ட நடக்கைக்கான முறையான தண்டனை என்னவாக இருக்கும் என்று நிதானிக்க நம்மால் இயலாததாய் உள்ளது. இருதயத்தின் நிலைமையை வாழ்க்கையின் கனிதருதல் சுட்டிக்காட்டுகிறது என்று நாம் அறிந்திருந்தாலும், யார்மீதும் நாம் தீர்ப்பை சுமத்தக்கூடாது, கர்த்தரே இந்த தீர்மானத்தை எடுப்பார். ''அவர்களுடைய கனிகளைக்கொண்டு அவர்களை அறிவீர்கள்'' என்ற நம் குருவின் வார்த்தைகளில் நாம் நேர்மறையான அறிவைப் பெற்றிருந்தால் மட்டுமே, அதனடிப்படையில் நம் சொந்த சிந்தைகளில் ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டும் என்ற கருத்தை அவர் நமக்கு அளிக்கிறார். ஒரு குறிப்பிட்ட ஜீவியம் ஜீவிக்கிற ஒருவரின் கனிகளால், அவர் தேவனோடு இணக்கமின்றி இருக்கிறார் என்று நிரூபணமாவதாக நம்மால் அறியமுடியும். ஆனாலும் இந்த விஷயத்தில் தீர்ப்பிட நாம் எந்த உரிமையும் பெற்றிருக்கவில்லை. அவரை தயவற்ற நிலைமைக்கு எது நடத்தியிருக்கும் என்று நம்மால் அறியமுடியாது.

**''நானும் என்னைக்குறித்து தீர்ப்பு சொல்லுகிறதில்லை'' – 1கொரி4 :3.**

நம் சொந்த விஷயத்தில் நம்மை நியாயந்தீர்ப்பதைக் குறித்து, தன்னை நன்கு அறியவோ, தன் இருதயத்தை நன்கு அறியும் திராணியையோ ஒருவனும் பெற்றிருக்கவில்லை. நாம் நம்மை நாமே நிதானிக்கும்போது, குறிப்பிட்ட அளவு கனிவான போக்கை நாம் பிரயோகிக்கவேண்டும் என அப்.பவுல் நமக்குக் காண்பிக்கிறார். மேலும்,''நானும் என்னைக் குறித்து தீர்ப்பிடேன்.. கர்த்தரே என்னைக் குறித்து நியாயத்தீர்ப்பு செய்கிறவர்'' என்று கூறுகிறார். இக்கூற்று நம் திறவுகோல் வசனத்திற்கு முரண்பட்டதல்ல, மாறாக தேவனுடைய தரநிலையானது எவ்வளவு உயர்ந்ததாயிருக்கிறது என்று நாம் உணர்ந்துகொள்ளும்போது, நாம் துர்க்குணத்தில் உருவானவர்கள் என்பதை கருத்தில் கொள்ளாமல், நாம் நம்மை நிதானிப்பதில் மிக கடுமையாக இருக்க சாயக்கூடும் என்பதே அவருடைய கருத்தாய்க் காணப்படுகிறது. ''நான் என்ன நம்பியிருந்தேனோ அந்த நிலையில் முற்றிலும் ஜீவிக்க இன்றைக்கு மீண்டும் தவறிவிட்டதை நான் உணர்கிறேன். இதனிமித்தமாக என் சொந்த தீர்ப்பின்முன், நான் கண்டிக்கப்பட்டதாக உணர்கிறேன். ஆனால் இவ்விஷயத்தில் கர்த்தரால் சில சலுகையை எனக்காக தரமுடியும் என்று நான் நம்புகிறேன். எனக்கு நானே காணாதபடிக்கு, அவரால் சில மன்னிப்பை அளிக்கமுடியும் என்று நான் நம்பிக்கையாயுள்ளேன். எந்தஅளவு சலுகை அளிக்கப்படும் என்று நாம் நிச்சயித்திருக்கவில்லை, என்னை நானே துல்லியமாக நிதானிக்க நான் திராணியற்றவன்'' என்று நாம் இந்த வழிகளில் நன்கு சிந்திக்கமுடியும்.

நம் பிதாவினிடத்தில் ஜெபத்தில் ஊக்கத்தோடு சென்று, அவருடைய நாமத்தை சிறப்பாக மகிமைப்படுத்துவதில் வெற்றிபெறாததால் நாம் துக்கமடைந்திருப்பதை அவரிடம் கூறவேண்டும். நம் நேச மீட்பரின் இரத்தத்தின் புண்ணியங்களுக்காக நாம் கெஞ்சி மன்றாடவேண்டும். அவருடைய கிருபையின் உதவியால், கூடுமானால் நான் சிறப்பாக செய்ய போராடுவேன் என்று கர்த்தரிடத்தில் வாக்களிக்கவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர், சிறிதளவில் மட்டும் தற்பெருமை கொண்டிருப்பதால், தங்களைக்குறித்த சொந்த நிதானிப்புக்களில் மிக கடுமையாக இருக்க சாய்கிறார்கள். அவர்களுடைய ஒவ்வொரு அபூரணத்தையும் கண்டிப்புடன் நிதானித்துப் பார்க்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களைத்தாங்களே நியாயமாக நிதானிக்க முயற்சிக்க வேண்டும். நாமே குற்றவாளிகளாக இருந்தாலும்கூட, எல்லா நியாயத்தீர்ப்புக்களும் நியாயமாக இருக்கவேண்டும். நீதி நியாயம் கர்த்தருடைய சிங்காசனத்தின் ஆதாரமாயுள்ளது. நம் இரட்சகரின் நீதியின் ஆடையாலும், கிருபாசனத்தாலும் நாம் மூடப்பட்டிருக்கிறோம் என்ற உண்மையை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது, அதைக்கொண்டு ஒவ்வொரு நாளும் படிகின்ற ஒவ்வொரு அசுத்தத்தையும் கழுவிக் கொள்ளவேண்டும். இது முறையானது மட்டுமல்ல, நாம் அனுதினமும் நம்மை நாமே ஆய்வு செய்வதும், நம் சரீரத்தை புதிய சிந்தைக்கு கீழ்ப்படுத்தியிருப்பதைக் காண்பதும் உண்மையாகவே ஒரு கடமையாகிறது. நம் அறியாமையில் செய்த தவறுகளையும் பிழைகளையும், நம் கர்த்தரின் புண்ணியத்தை பொருந்தச்செய்து மூடவும், பகலும் இரவும் இவ்வாறு பொருந்தச் செய்யும்போது, நம் பிதாவின் அன்புக்குள்ளும் அங்கீகாரத்துக்குள்ளும் நம்மைக் காத்துக்கொள்வோம். கர்த்தரிடமிருந்து அதிக சிட்சையை அடையவேண்டிய அவசியமிராது.

நம்மைக் குறித்து அன்றாட இருப்புக் கணக்கை(stock ) எடுக்கும்போது, உள்ளேயும் புறம்பேயும் உள்ள நம் ஆவிக்குரிய எதிரிகள் அனைவரோடும் நிலையாகப் போராடினதால் கிறிஸ்துவுக்குள்ளான

புதுசிருஷ்டிகளாக, லாபங்களையும் நஷ்டங்களையும் பகுத்தறியும்போது, இவைகள் எங்கிருந்து, எப்படி வந்தன என்று தேவப்பிள்ளை ஒவ்வொருவரும் ஆதாயமடைந்திருப்பதை நிச்சயமாக இது நிருபிக்கும். பரலோகத்தகப்பனை பிரியப்படுத்த விருப்பங்கொண்டு, கர்த்தருக்குப் பயந்து, இப்படிப்பட்ட கணக்கை தனக்குத்தானே எடுக்கின்ற தேவனுடைய பிள்ளை ஒவ்வொருவரும் நிச்சயமாக ஆதாயமடைந்திருப்பதை நிரூபிப்பர். ஒரு உண்மை பரிசுத்தவானாக ஆவதற்காக, தேவன் வைத்திருக்கிற அனைத்தையும் அவன் பெற்றுக்கொள்வான்.

-------

**R 5520**

## உடனடி கீழ்ப்படிதலால் உண்மைத்தன்மை நிருபிக்கப்படும்

## LOYALTY PROVED BY PROMPT OBEDIENCE

**“என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான், நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்” – யோவான் 14:21.**

இப்பாடத்தின் திறவுகோல் வசனம், நம் கர்த்தர் சிலுவையிலறையப்படுவதற்கு முன்னர், தம் பன்னிரெண்டு சீஷர்களுக்கு கொடுத்த இறுதி பிரசங்கத்தின் ஒரு பகுதியாக இருந்தது. “என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டவன்..” என்ற வார்த்தைகள், என் கற்பனைகளை அடைந்திருக்கிறவன் மனப்பூர்வமாக என் சீஷனாகிறான் என்பதைக் குறிப்பிடுகிறது. கட்டளையை வெறுமனே கேட்பது அல்லது கட்டளையை புரிந்து கொள்வது என்பது, அதைப் பெற்றிருத்தலாகாது. இக்கருத்தை ஜனங்கள் தவறாகப் புரிந்துகொள்கின்றனர். அநேகர் கட்டளைகளுக்கு செவிசாய்க்கிறார்கள், அதற்கு பகுதியளவு கீழ்ப்படிதலை காண்பிக்கின்றனர், ஆனால் உண்மையான அர்த்தத்தில் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. கர்த்தருடனான நிலையான ஒப்பந்தத்தின் இக்காரியமானது, மிக முக்கியத்துவமான ஒன்று. இதை ஏற்படுத்தாதவர்கள் அவருக்கு உண்மையான சீஷர்களல்லர், அவருடைய கரங்களுக்குள் தங்களை நிஜமாக ஒப்புக்கொடுக்கவில்லை, ஆகவே இவர்களது கப்பல் கவிழும் ஆபத்திலுள்ளது.

ஒரு நிலையான ஆசீர்வாதத்தைக் குறித்து நாம் அறிந்திருக்கலாம், ஆனால் கர்த்தருடனான உறவில் நம் ஒப்பந்தத்தை முடிக்கவேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம். “கர்த்தருடைய சித்தத்துக்கு முரணாக நான் எதையும் செய்ய முயற்சிப்பதில்லை, அவர் என்னை வலியுறுத்துகிற காரியங்களை மட்டுமே செய்வேன்” என்று வெறுமனே கூறலாம், கிறிஸ்துவின் பள்ளியில் நுழைபவர்க்கான சரியான மனப்பான்மை இது அல்ல. கிறிஸ்துவின் சீஷர்களாவதற்கு சில நிலையான படிகள் உள்ளன. ஒரு பள்ளியில் ஒரு நபர் பார்வையாளராக இருக்கலாம், ஆனால் அப்பள்ளி இயக்குகின்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குகளை ஏற்றுக்கொண்டு, அவர் அந்தப் பள்ளியின் நிபந்தனைகளை சந்தித்திராவிடில், அவர் அந்தப் பள்ளியின் உறுப்பினராக இருக்கமாட்டார்.

**நம் கர்த்தரின் அன்பின் பிரமாணம்**

“நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குட்படாமல் கிருபைக்கு உட்பட்டிருக்கிறீர்களே!” என்று அப்.பவுல் கூறுகிறார். இன்னும் நம் கர்த்தர், அவருடைய கட்டளைகளை நாம் கைக்கொள்வது குறித்துப் பேசுகிறார். இந்த இரு கருத்துக்களை எப்படி நாம் இசைவாக்குவது ? கிறிஸ்து கொடுத்த கட்டளைகளாகிய பிரமாணத்துக்கும், அப்போஸ்தலர் குறிப்பிடுகிற நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கும் இடையிலான வேறுபாட்டை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாம் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழ்ப்பட்டோரல்ல. அதன் ஆசீரைப் பெறவிரும்புவோர், அதற்குத் தேவையான அதன் ஒவ்வொரு எதிர்பார்ப்பையும் பூரணமாக கடைப்பிடிக்கவேண்டும், அல்லது மரணசாபத்தால் துன்புறவேண்டும். நம் கர்த்தராகிய இயேசுவின் ஏற்பாட்டின்கீழ், அவரது சீஷர்களாக இருப்போர், ஏற்கனவே அவருடைய நீதியின் ஆடையின் கீழுள்ளனர், இவர்கள் அவருடைய கட்டளைகளை செய்யத்தேடவும், அவரது சித்தம் செய்ய தங்கள் முழு இருதயத்தோடு போராடவும் வேண்டும், அதனால், அவர் மூலமாக நித்திய ஜீவனை அவர்கள் பெறுவார்கள். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தர். அபூரணங்களுக்காக எந்த சலுகையும் அளிக்க தகுதிபெற்றிருக்கவில்லை.

நம் கர்த்தர் இங்கு, “கட்டளைகள்” என்று பன்மையில் பேசுகிறார். ஆகவே இவ்வார்த்தைகளை “நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளையாக கொடுக்கிறேன்” என்று அவர் கூறியதோடு இணைத்து, இரண்டும் ஒரே அர்த்தமுடையது என்று புரிந்துகொள்ளக்கூடாது. அல்லது பத்துக்கட்டளைகளின் பிரமாணத்தை; “உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு சிந்தையோடும் நேசிப்பாயாக, உன் அயலானை உன்னைப்போல் நேசிப்பாயாக” என்று சுருக்கமான அறிக்கையாக அவர் அர்த்தப்படுத்துவதாக புரிந்துகொள்ளக்கூடாது. யார் என் போதனைகளை ஏற்றுக்கொண்டு, என்னைப் பின்பற்றுகிறார்களோ, அவர்கள் என்னிடத்தில் அன்பாயிருப்பதை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள், அவர்களை நானும் நேசிக்கிறேன் என்பதே நம் கர்த்தர்அர்த்தப்படுத்துவதாக நாம் புரிந்துகொள்கிறோம். இந்தக் கட்டளைகள், வாழ்க்கையின் எல்லா நடவடிக்கைகளிலும் அவர்கள் தாங்கியிருக்கின்ற, கர்த்தருடைய பொதுவான போதனைகளாக காணப்படுகிறது. மத்தேயு 5ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள குறிப்பிட்ட சில தொகுப்புக்களைப்போல, இவையும் சில தொகுப்புக்கள் என நாம் புரிந்துகொள்ளலாகாது.

அங்கே(மத்தேயு 5ம்அதிகாரத்தில்), சாந்தம், நீதி போன்ற பல பண்புகள் அவசியமானவைகளாக அவர் வரையறுக்கிறார். இவைகள் கட்டளையிடப்படவில்லை.

**அன்பு ஊழியம் செய்வதில் சந்தோஷப்படும்**

நம் கர்த்தரின் கட்டளைகள் வற்புறுத்தப்படும் விதத்தில் கொடுக்கப்படவில்லை, மாறாக அவரை யார் நேசிக்கிறார்களோ, அவர்கள் அவருக்கு ஊழியம் செய்வார்கள். அப்போஸ்தலருடைய நிருபங்கள் மூலமாக பேசுகையிலும், வெளிப்படுத்தின விசேஷத்தின் புத்தகத்திலும், எது நீதி என்றும், எது அன்பு என்றும் இயேசு நமக்கு பல்வேறு வெளிப்பாடுகளை கொடுத்திருக்கிறார். ஆகவே யாரெல்லாம் அவரோடுகூட இருக்கவும், ஆளுகை செய்யவும் விரும்புகிறார்களோ, அவர்கள் அவரிடமிருந்துவருகிற ஒவ்வொரு சைகைக்கும் கீழ்ப்படிய மனதாயிருப்பார்கள். ஒரு தன்னிச்சையான கட்டளையின் தன்மையில் எதுவும் இல்லை, வெறும் கொள்கையின் நிலைப்பாடு மட்டுமே உள்ளது. ஆனால் இவைகள் நமக்கு கட்டளைகளாகின்றன. அவரை நேசித்து அவருக்கு ஊழியம்புரிய விரும்புவோர்க்கு அவரது சித்தத்தை அறிவது ஒரு பிரமாணமாகிறது. "செய்வாயாக, செய்யாதிருப்பாயாக" என்று நாம் விடப்படாதபடி, நம் ஆர்வத்தையும் உண்மைத்தன்மையையும் நிரூபிக்கும்படியாக, இது இந்த யுகத்தின் தெய்வீக ஏற்பாடாக காணப்படுகின்றது.

"நான் பெயர்சபையை விட்டுவிடாதிருப்பேனாகில் அல்லது அடையாளமான தண்ணீர் ஞானஸ்நானத்தை நான் நிறைவேற்றாதிருப்பேனாகில், கர்த்தர் என்னை புறக்கணிப்பார் என்று நீ எண்ணுகிறாயா" என்று, சிலசமயங்களில் நம் நண்பர்களில் சிலர் நம்மிடத்தில் கேட்கக்கூடும். அவர்கள் முழு விஷயத்தையும் தவறாகப் புரிந்திருக்கிறார்கள் என்று நாம் அவர்களிடத்தில் கூறவேண்டும். கர்த்தர் நமது கடமையையும் சிலாக்கியத்தையும் மட்டுமே நமக்குக் காண்பிப்பார், கர்த்தருடைய சித்தம் செய்வதில் களிகூறாதவர்கள், அவரிடத்தில் அர்ப்பணிக்காதிருத்தலே சிறந்ததாயிருக்கும். தம்மைத் தொழுதுகொள்வோர் ஆவியிலும் உண்மையிலும் தொழுதுகொள்ளவேண்டும் என்றே கர்த்தர் விரும்புகிறார். ஆயிரமாண்டு அரசாட்சியில் உலகத்தை தண்டனைகள் மற்றும் ஆசீர்வாதங்கள் மூலமாக அவர் நடத்துவார். அங்கு கீழ்ப்படிதல் என்பது நிர்ப்பந்திக்கப்படும். ஆனால் இதோ என் சித்தம், நீ விரும்பினாயானால் மேலோட்டமாக மட்டும் பார்க்காமல், அதன் வழி கூறப்படும் உட்பொருளை கவனித்து அர்த்தம் பெறுதல்வேண்டும் என்று இப்போது அவர் கூறுகிறார். நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு நான் உன்னை கீழாக்கவில்லை, மாறாக உன் முன்பாக மாபெரும் வாய்ப்பை நான் வைத்துள்ளேன். நீ இந்த சிலாக்கியத்தை மதித்துணர்வாயானால் என் சீஷனாவாய். உடனடி நேர்மறையான நிலைப்பாட்டினை எடுப்பதன்மூலம், உன் கீழ்ப்படிதலையும் மதித்துணர்தலையும் காண்பி, உன்னை நீ மேன்மை பாராட்டத் தேவையில்லை. எதையும் நான் உன்னிடம் வற்புறுத்துவதில்லை, வாய்ப்பை மட்டுமே உனக்கு அளிப்பேன்.

கர்த்தருடைய மாபெரும் கொடையை மதித்துணர்வோரை அவர் கவனத்தில் கொள்கிறார். அவரது மணவாட்டியை ஏற்றுக்கொள்ள அவர் வரும்போது, அவர்களே அவரோடுகூட ஆளுகை செய்வார்கள்.

---

**R 5521**

## மாபெரும் கற்பனைகள்
## THE GREAT COMMANDMENTS

**ஆதார வசனங்கள்** : மாற்கு 12: 28–44

**திறவுகோல் வசனம் : லூக்கா10:27 "..உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் உன் முழு சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக..."**

கேள்வி நாளில் நியாயசாஸ்திரிகள் நம் கர்த்தரைச் சிக்கவைக்க முயன்று பல கேள்விகளைக் கேட்டனர். அதில் இறுதியாகக் கேட்கப்பட்ட கேள்வியைக் குறித்து இன்றைய பாடத்தில் பார்க்க இருக்கிறோம். நம்முடைய கர்த்தருக்கு முன்பாக பல்வேறு கேள்விகள் முன்வைக்கப்பட்டதையும், அதற்கு அவர் நன்றாய் உத்தரவு சொன்னதையும் அறிந்தவனாய், சராசரிக்கும் மேலான கல்வியறிவைப் பெற்றிருந்த வேதபாரகரில் ஒருவன், இயேசுவைச் சிக்கவைக்கும் நோக்கில் அல்லாமல், முழு நேர்மையோடு ஒரு கேள்வியைக் கர்த்தரிடத்தில் கேட்டான். என்னவெனில், "கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எது ? என்பதே. சந்தேகத்திற்கு இடமின்றி பத்துக்கட்டளைகளைக் குறித்தே அவன் கேட்டிருந்தான். "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால், இஸ்ரயேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை"(மாற்கு 12:29,30).

இங்கே நம்முடைய கர்த்தர் பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காட்டியிருக்கிறார்(உபாகமம் 6:4,5). இந்த வாக்கியமானது எவ்வளவு அற்புதமாக எல்லாவற்றையும் உள்ளடக்கினதாக இருக்கின்றது. இந்த வசனத்தின் மாபெரும் சத்தியத்தை நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப்பிறகு இன்று யாரால் அதி சுருக்கமாக கூறமுடியும் ? அதன் முதலாம் வாக்கியத்தில் பரலோக ஞானம் வெளிப்பட்டது. அதே பரலோக ஞானம்தான், அதைக்குறித்து நமது கர்த்தர் குறிப்பிட்டதிலும் வெளிப்பட்டது. அவர் அதனோடு எதையும் சேர்க்கவில்லை, ஏனென்றால் அதனோடு எதையும் சேர்க்கவும் முடியாது.

மேலும் இந்த வாக்கியத்தில் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ள காரியமாகிய அன்பை நம்மால்

அனுதினமும் மிகத் தெளிவாக பார்க்கமுடிகிறது. அன்பே பிரதானம்! கடந்த காலங்களில் பலர் அறிக்கை பண்ணப்பட்ட விசுவாசப்பிரமாணங்களின் பிரகாரமாக, இந்த வாக்கியத்தை, நாம் திகிலடையவேண்டும், பயப்படவேண்டும், நடுங்கவேண்டும் என்பதாக மாற்றி வாசித்திருக்கலாம்; ஏனெனில், பிரபஞ்சத்தின் சர்வவல்லமையுள்ள தேவன், மனிதனை சிருஷ்டிப்பதற்கு முன்பிருந்தே அவனுக்காக சித்திரவதைக்கான மாபெரும் நரகத்தை ஏற்படுத்திவைத்துள்ளார் என்றும், அதில் மனுக்குலத்தின் பெரும்பகுதி நித்தியமாக துன்புறுத்தப்பட வேண்டும் என்று அவர் சித்தங்கொண்டிருந்தார் என்றும் நமக்கு சொல்லப்பட்டது. ஆனால் இவையெல்லாம் விசுவாசப் பிரமாணங்களில் காணப்பட்டது. வேதாகமமோ அனைத்து மனித விசுவாசப்பிரமாணங்களிலிருந்தும் மூட நம்பிக்கைகளிலிருந்தும் விலகி தனித்து நிற்கிறது. மேலும் தேவன் அன்பாகவே இருக்கிறார் என்றும், அவர் வெளிச்சம் மற்றும் இரக்கத்தின் பிதா என்றும், அவரிடமிருந்தே நன்மையான எந்தவொரு ஈவும், பூரணமான எந்தவொரு வரமும் இறங்கிவருகிறது என்றும் நமக்குக் கூறுகின்றது.

கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலம் தெய்வீக மன்னிப்பு உண்டு என்று உலகத்தோற்றத்துக்கு முன்பே தெய்வீகமாக ஏற்பாடு செய்யப்பட்டது என்பது பற்றியும் வேதாகமம் நமக்குக் கூறுகின்றது. இந்தப் பாவமன்னிப்பானது, இப்போது உலகத்திலிருந்து அழைக்கப்பட்டுவருகிற, சிறுவகுப்பினராகிய தெரிந்துகொள்ளப்பட்ட திருச்சபைக்கு மாத்திரம் அல்ல, இறுதியில் தேவனுடைய அன்பு அவருடைய சிருஷ்டிகள் அனைத்திற்கும்கூட வெளிப்படுத்தப்படும் என்றும் சொல்கிறது. என்ன நோக்கத்திற்காகவெனில், ஏற்றவேளையில் அந்த அன்பைக்குறித்த அறிவுக்கு வருவதன்மூலம், அவர்கள் பாவத்தைத் துறந்து, தெய்வீக ஏற்பாட்டை ஏற்றுக்கொள்வார்கள் – அதாவது, மேசியாவின் இராஜ்யத்தின் கீழாக, தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினால் இழந்துபோன மனரீதியான, ஒழுக்கநெறி ரீதியான, மற்றும் சரீரரீதியான பரிபூரணத்தைத் திரும்பப் பெறும் மிகப்பெரிய ஆசீர்வாதத்தை அடைவார்கள்.

**இரண்டாம் கட்டளை**

இயேசு, கேட்கப்பட்ட கேள்விக்கு அப்பால் சென்று, ''உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக'' எனும் இரண்டாம் கட்டளையானது முதல் கட்டளையோடு தொடர்புடையதாயுள்ளது என்று அறிவித்தார். இவ்வளவு குறைவான வார்த்தைகளில் எவ்வளவுஅதிகமானவை கூறப்பட்டுள்ளது என்ற அதிசயத்தை, நாம் அனைவரும் வியப்புடன் பார்க்கிறோம். பல தொகுதிகள் எழுதப்பட்டிருந்தபோதிலும், அவையெல்லாம் மிகக் குறைவானதையே உள்ளடக்கமாக கொண்டிருக்கின்றன. வேதாகமத்தைத் தவிர வேறு எந்த மதமும் அத்தகைய இரக்கமும் மனதுருக்கமுமுள்ள ஒரு தேவனை வெளிப்படுத்தவில்லை. இது அவருடைய சிருஷ்டிகளின் நலனுக்காக, அவரது அன்பின் ஏற்பாட்டின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. வேறு எந்த மதமும் பதிலுக்கு அன்பு காட்டவேண்டும் என்று குறிப்பிடவே இல்லை. மற்ற எந்த மதமும் நம் சக மனிதர்களிடம் இவ்வளவு உயர்ந்த தரநிலையைக் காண்பிக்கவேண்டும் என்று பரிந்துரைப்பதில்லை.

இப்போது ஏறக்குறைய நான்காயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்ததாயிருக்கும் தேவனுடைய இந்தப் பிரமாணமானது, யூதர்கள் மூலம் மற்ற தேசங்களுக்கும் ஜனங்களுக்கும் கிட்டத்தட்ட அறியப்பண்ணப்பட்டது(உபாகமம் 4:6–8); ஆனால் அவர்களில் யாரும் அதன் உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்ளவில்லை. இந்தக் கருத்துக்கு மிகவும் நெருக்கமான ஓர் அணுகுமுறையை, மற்றவர்கள் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்பமாட்டீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யாதிருங்கள் என்ற அணுகுமுறையை கன்பூசியஸின் எழுத்துக்களில் அநேகமாகக் காணலாம். ஆனால் என்ன ஒரு வித்தியாசம்! ஒன்று – வெறும் எதிர்மறையான வாக்கியம், மற்றொன்றோ நேர்மறையான வாக்கியம். அதாவது, ''உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக''

உண்மையாகவே தேவனுடைய நியாயப்பிரமாணத்தை தெய்வீகம் என்று முத்திரை குத்துகிற ஏதோஒன்று அப்பிரமாணத்தில் உள்ளது. என்னதான் உலகத்தில் முட்கள், குருக்குகள் மற்றும் சிரமங்கள் காணப்பட்டாலும்கூட, ஒவ்வொரு மனிதனும் பரமபிதாவை எல்லாவற்றிற்கும் மேலாக அன்புகூர்ந்து, முழு வல்லமையோடும் தாலந்தோடும் அவரைத் தொழுதுகொள்ளுவது, மற்றும் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல பிறனிடத்திலும் அன்புகூர்ந்து, தனக்கு வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் பிறனுக்கு உதவிசெய்வதற்கு முயற்சிசெய்வது எனும் இந்த இரண்டு மகத்தான பிரமாணங்களுக்கு இணங்கி வாழ மனுஷர் வல்லவர்களாயும் மனவிருப்பமுள்ளோராயும் இருந்திருந்தால், இந்த உலகம் எவ்வளவு அழகாக இருந்திருக்கும்! அது பரதீசாக இருந்திருக்கும். தேவனுக்கு ஸ்தோத்திரம், மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது உலகம் அப்படியாகத்தான் இருக்கப்போகிறது என்று நமக்கு உறுதியளிக்கப்படுகின்றது.

ஆதாமின் பாவத்தை ஈடுசெய்வதற்காக கிறிஸ்துவை மரிக்கச்செய்த தெய்வீக ஏற்பாடானது, பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையை ஈடுசெய்வதற்காக கிறிஸ்துவின் ஆளுகையையும் வழங்கியிருக்கிறது. இறுதியில், நீதியையும் சத்தியத்தையும் விரும்பி நேசிக்கிற அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டு, பூரணப்படுத்தப்பட்டு நித்திய ஜீவனைப் பெறுவார்கள் என தெய்வீக வாக்குத்தத்தமானது நமக்கு உறுதியளிக்கிறது. மேசியாவின் ஆயிரவருட அரசாட்சியில்,

தேவனுடைய பாதப்படியாகிய பூமியானது மகிமைப்படுத்தப்படும் என்றும், இறுதியில், நீதியில் முன்னேற மறுத்து பாவத்தை விரும்புகிற அனைவரும், ஜனங்கள் மத்தியில் இராதபடிக்கு, இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள் என்றும் அது நமக்கு உறுதியளிக்கிறது. ''உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக'' என்று நாம் நீண்டகாலமாக ஜெபித்துக்கொண்டிருக்கும் அந்த மகிழ்ச்சியான நாள் இப்படியாக வரவிருக்கிறது. முழங்கால் யாவும் முடங்கும், நாவு யாவும் அறிக்கைபண்ணும், பூமி முழுவதும் தேவனுடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்கிற வாக்குத்தத்தம் அப்போது நிறைவேறும்.

**''இராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல''**

அந்த வேதபாரகன் இயேசுவின் பதிலினால் ஈர்க்கப்பட்டவனாக, அந்தப் பதிலில் இருந்த சத்தியத்தை ஒப்புக்கொண்டான். ''சரிதான் போதகரே, நீர் சொன்னது சத்தியம் ; ஒரே தேவன் உண்டு, அவரைத்தவிர வேறொரு தேவன் இல்லை. முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூருகிறதும், தன்னிடத்தில் அன்புகூருகிறதுபோல் பிறனிடத்தில் அன்புகூருகிறதுமே சர்வாங்க தகனம் முதலிய பலிகளைப் பார்க்கிலும் முக்கியமானதாயிருக்கிறது என்றான்'' (மாற்கு 12:32,33).

''அவன் விவேகமாய் உத்தரவு சொன்னதை இயேசு கண்டு: ''நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல! என்றார்''. இதன் மூலமாக போதகர் என்ன சொல்கிறாரெனில், இராஜ்யத்துக்குக் காத்திருந்து, அதை நம்பிக்கையோடு எதிர்பார்த்து, அதற்காகப் பாடுபட்டுவருகிற, அதற்காக ஆயத்தமாகிவருகிற தம்முடைய சீஷர்களில் ஒருவராக ஆகக்கூடிய இடத்திற்கு மிக அருகில் அந்த வேதபாரகன் இருக்கிறார் என்பதாகும். புறஜாதியாருக்கு இராஜ்யத்தின் சிலாக்கியங்களுக்கான கதவைத் திறந்துவிடுவதற்கு முன்பாக, இப்படிப்பட்ட கபடற்ற ''உத்தம இஸ்ரயேலரைத்'' தான், இயேசு விசேஷமாக யூத ஜனங்கள் மத்தியிலிருந்து சேகரிக்க முயன்றார். தம்முடைய வருகையின்போது மேசியாவானவர் ஒரு இராஜ்ய வகுப்பாரைத் தேர்ந்தெடுப்பார், அவர்களுக்குத் தெய்வீக வல்லமை அருளப்படும் என்பதை யூதர்கள் புரிந்திருந்தனர். இதைத்தான் இயேசுவும் செய்து கொண்டிருந்தார். அவருடைய வார்த்தைகள், அவருடைய போதனைகள் சிலரை இழுத்தது, சிலரை விலகச்செய்தது.

உண்மையும், நேர்மையுமான இருதயமுள்ள அனைவரும், இந்த வாலிப வேதபாரகனைப்போலவே, இராஜ்யத்துக்குத் தூரமானவர்களல்ல. அவர்களின் நேர்மையும், உண்மையும், பிதாவின் சித்தத்தை அறிந்துகொள்வதற்கும், அதனைச் செய்வதற்கும் நேராக அவர்களை வழிநடத்துமேயானால், அவர்கள் பாக்கியவான்களாய் இருப்பார்கள்; ஏனென்றால், ''கர்த்தருடைய இரகசியம் அவரிடம் பயபக்திகொண்டிருப்பவர்களிடம் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்''(சங்25 : 14)

**''கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்''**

எருசலேமிலிருந்த ஆலயம் இன்னும் புதியதாக இருந்தது, அதன் பராமரிப்பு முதலானவைகளுக்கு பணம் தேவைப்பட்டது. ஜனங்கள் அதற்குத் தங்களது பங்களிப்பை அளிக்கும் சிலாக்கியம் பெற்றிருந்தனர். அதனை மனவிருப்பத்துடனே செய்தனர். மூதாதையர்களின் மரபுகளால் –அல்லது அவர்களுடைய முன்னோர்களின் போதனைகளால் எவ்வளவுதான் அவர்கள் தவறாக வழிநடத்தப்பட்டிருந்தாலும், தங்களுடைய குருடாக்கப்பட்ட நியாயசாஸ்திரிகளுடைய தவறான வழிநடத்துதலால் அவர்கள் எவ்வளவுதான் குழப்பமடைந்திருந்தாலும் கூட, அவர்கள் தேவனுக்கு ஆராதனை செய்யவும், அவரைத் தொழுதுகொள்வதற்குமான வாஞ்சை உடையோராயிருந்தனர். தங்கள் பணத்தைக் கொண்டுவந்து, ஆலயத்தின் வாசலுக்கு அருகில் இருந்த காணிக்கைப் பெட்டிகளில் போடுவதற்கு அவர்கள் தயாராக இருந்ததன் மூலம் இது வெளிப்பட்டது.

இயேசு இந்தக் காணிக்கைப் பெட்டிகளுக்கு எதிராக உட்கார்ந்து, அனைத்து தரப்பு மக்களும் எவ்வாறு தங்களது காணிக்கையை அளிக்கிறார்கள் என்பதைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஐசுவரியவான்கள் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப்போட்டார்கள். ஏழைகள் தங்கள் கொஞ்சத்திலிருந்தெடுத்துப் போட்டார்கள். அப்போது ஏழையான ஒரு விதவையும் வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசை – ஒவ்வொன்றும் ஒரு சென்டின் எட்டில் ஒரு பங்கு மதிப்புடையவையாக இருந்த புழக்கத்திலிருந்த மிகச்சிறிய செப்புக் காசுகளை காணிக்கைப்பெட்டியில் போட்டாள். ஏழை விதவை இதை ஒரு பகட்டான முறையில் போட்டதாக நாம் கருத வேண்டியதில்லை. ஏனென்றால், பெருமை பேசமுடியாதளவுக்கு அந்த நாணயங்கள் மிகவும் சிறியவையாக இருந்தன. இயேசு தெய்வீக வல்லமையால் அந்த ஸ்திரீயையும், அவளுடைய சூழ்நிலைகளையும், அவளுடைய காணிக்கையின் அளவையும் அறிந்திருந்தார் என்று நாம் அனுமானிக்கிறோம். அவர் அதை அப்போஸ்தலர்களிடத்தில் பேசும் ஒரு சிறிய பிரசங்கத்திற்கான உரையாக ஆக்கினார். காணிக்கைப் பெட்டியில் பணம்போட்ட மற்றெல்லாரைப் பார்க்கிலும், இந்த ஏழை விதவை தேவனுடைய பார்வையில் அதிகமாய் போட்டாள் என்று அவர் தெரிவித்தார். இவளோ தன்னிடம் உள்ள அனைத்தையும், அதாவது தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்த அனைத்தையும் போட்டுவிட்டாள். மற்றவர்கள் தங்கள் பரிபூரணத்திலிருந்து கொஞ்சம் மட்டும் எடுத்துப்போட்டார்கள், அதாவது அவற்றின் இழப்பு அவர்களுக்கு எந்த பெரிய பாதிப்பையும் ஏற்படுத்தாது, அம்மாதிரியான பங்களிப்பை அளித்தனர் என்று, அவர்கள் சீஷர்கள் ஆச்சரியப்படும் வகையில் அவர் விளக்கினார்.

இந்த சிறிய சம்பவம், கர்த்தர் பலிகளையும் ஊழியங்களையும் மதிக்கிறார் என்பதை நமக்குக் காட்டுகிறது.

நம்மில் எவரும் செய்யும், அல்லது செய்ய முயற்சிக்கும் பெரிய காரியங்களை கர்த்தர் உயர்வாக மதிப்பதில்லை. நம் வாழ்வின் மிகச்சிறிய நடவடிக்கைகள், மிகச்சிறிய தியாகங்கள், மிகச்சிறிய சுயத்தை வெறுத்தல்கள், உலகத்தின் பார்வையில் ஒன்றுமில்லாதவையாக இருக்கும். ஆனால் அவை, கர்த்தர் மற்றும் அவர் நிமித்தமாக செய்யும் சுயதியாகங்கள், அன்பு, பக்தி ஆகியவற்றைக் குறிக்கும் பட்சத்தில், எஜமானருடைய பார்வையில் மிகப்பெரியதாயிருக்கும்.

மேலும், அந்த ஸ்திரீ(தேவகுமாரனாகிய) தம்மை நிராகரிக்கும் ஒரு ஸ்தாபனத்துக்கு, தொடர்ந்து நிலைநிற்பதற்கு தகுதியல்லாத காரணத்தினால் விரைவில் அழியவிருந்த ஒரு ஸ்தாபனத்துக்கு பணம் கொடுக்கிறாள் என்பதை கர்த்தர் அறிந்திருந்தார். ஆனால் மற்றவர்களின் நிலை என்னவாக இருந்தாலும் சரி. கர்த்தர் இந்தப் பங்களிப்பாளருடைய இருதயத்தையும் காணிக்கையின் நோக்கத்தையுமே பார்த்தார்– ''அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்''. அவள் இறுதியில் ஒரு சீஷியானாள் என்பது நமக்குத் தெரியும். இப்படிப்பட்ட சுயதியாகம் செய்யும் நபர்களிலிருந்தே கர்த்தர் சீஷர்களை உருவாக்குகிறார்.

---------

**R 1559**

## கர்த்தருக்குள் இளைப்பாறுவீர்

### REST IN THE LORD

தேவன் உனக்கு என்ன செய்ய சித்தம் கொண்டுள்ளாரோ, செய்யட்டும் விட்டுவிடு!
அவர் நிலைத்தன்மை உடையவரே, உண்மையுள்ளவர் என்பதையும் அறிந்துகொள்வீர்!
ஒவ்வொரு மணிநேரத்திலும் அவர் உன்னை எப்படி நடத்த விரும்புகிறாரோ, அதன்படியே பின்பற்றி நடந்திடுவீர்
அந்த வேளைக்குத் தேவையான ஆற்றலை அளித்திடுவார்,
அவரில் விசுவாசம் வைத்துவிடு! அவ்வளவுதானே!
பிறகு பார்! அந்த நாள் உனக்கு மிகவும் அமைதலான
நன்னாளாய் அமைந்துவிடுமே, என்னதான் விழுதலுக்குள்
சென்றாலும், வெளிச்சமாகவும், ஆசீர்வாதமாகவும், அமைதலுடனும், சுதந்திரமாகவுமே அமைந்துவிடுமே, அப்பொழுது கட்டவிழ்க்கப்படும்
ஒவ்வொரு பிரகாசமான வெளிச்சத்தினையும், நினைவுகூர்ந்திடு,
அதன் தற்போதைய ஆற்றல் கண்டே
அமைதலுடனே இருந்துவிடு,
எல்லாவற்றையும் எதிர்கொள்ளுமே,
நீயே அதன் போக்கினை அறிந்துகொள்வாய்,
வேறெந்த ஆற்றலாலும் அதனை எடுத்துப்போட இயலாதே, மாற்றிவிட முடியாதே.

---------

**R 5522**

## பத்துக் கன்னிகைகள்

### THE TEN VIRGINS

**ஆதார வசனங்கள் :** மத்தேயு 25: 1–13.

**திறவுகோல் வசனம் : மத்தேயு 25:13 "…அந்த நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்"**

நம்முடைய கர்த்தர் சிலுவையில் அறையப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு, ''உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?'' என்று சீஷர்கள் கேட்டபோது, அவர் அளித்த பதிலின் ஒரு பகுதியாக இன்றைய தியானத்திற்கென்று எடுக்கப்பட்டுள்ள உவமையானது உரைக்கப்பட்டிருப்பதாக கருதப்படுகிறது. முந்தைய அதிகாரத்தில் எஜமானர் தம்முடைய இரண்டாம் வருகையின் காலம் வரைக்கும், அதாவது இந்த சுவிசேஷ யுகம் முழு நிறைவடைந்து, நமக்கு முன்பாக வரவிருக்கும் யுகமாகிய மேசியாவின் யுகம் துவங்கவிருக்கும் காலம்வரைக்கும், தம்முடைய ஜனங்களுக்கு ஏற்படும் பல்வேறு அனுபவங்களை தடயங்களாக குறிப்பிடுகிறார்.

இந்த உவமையைக் கவனத்தில் கொள்ளும்போது, முதலில் இது எல்லாக் காலங்களுக்கும் எல்லா நிலைமைகளுக்குக் கீழாகவும் பொருந்தி வருவதில்லை என்பதைக் கவனிப்பது சரியாக இருக்கும். இது, ''அப்பொழுது(Then)'' என்ற முதல் வார்த்தையால் காண்பிக்கப்படுகின்றது. அதாவது, ''அந்தச்சமயத்தில்'' ''பரலோக இராஜ்யம் … பத்துக்கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்''. மேலும் உவமையானது பொதுவான உலகத்தைக் குறித்து விவரிக்காமல், மாறாக ''கன்னிகை'' வகுப்பாரை – சபை வகுப்பாரை– உலகத்தைவிட்டு வந்த தூய்மையுள்ளவர்களை, கிறிஸ்துவின் மூலம் தேவனிடம் வந்தவர்களை, அவருடைய இரத்தத்தில் விசுவாசம் வைத்ததினால் நீதிமானாக்கப்பட்டவர்களை, இவ்வாறு இராஜ்ய வகுப்பாராகிய மணவாட்டி வகுப்பாரில் வருங்கால அங்கத்தினர்களாக ஆக்கப்பட்டவர்களைக் குறித்து விவரிக்கின்றது என்பதையும் கவனிக்கவேண்டும். எனவே, உலகத்தின் மனப்பான்மை அல்லது பெயரளவிலான சபையின் மனப்பான்மை என்னவாக இருந்தாலும், இந்த யுகத்தின் முடிவில், கிறிஸ்துவின் மெய்த் திருச்சபையில் ஒரு பிரிக்கப்படுதல் (separation or division ) நிகழும் என்பதை இந்த உவமை காட்டுகின்றது.

யூதர்கள் மத்தியில், மணவாளனுக்கும் மணவாட்டிக்கும் இடையிலான நிச்சயதார்த்தமானது, வழக்கமாக திருமண விருந்தில் ஒன்றுகூடி வருவதற்கு ஒரு வருடம் முன்பு நடைபெறும். திருமணத்தின் கடமைகள், நிச்சயதார்த்தத்துக்குப்பிறகு ஒரு வருடம் பொருந்துவதாக இருந்தது. மேலும் அந்தக் கால

இடைவெளியில். மணவாளனுக்கு ஏதேனும் துரோகம் இழைக்கப்படும் பட்சத்தில், அது திருமண ஒப்பந்தத்தை முறித்துப்போடும் அல்லது இரத்து செய்யும். இது வழக்கமாக மணவாளனால் நேரடியாக செய்யப்படாமல், இடையில் இருக்கும் முகவர்கள் மூலமாக செய்யப்பட்டது. எனவே இந்தச் சுவிசேஷ யுகக் காலத்தின்போது, சபை கிறிஸ்துவுக்கென்று நிச்சயிக்கப்படுகிறது. மேலும் "தூரதேசத்திற்கு" சென்றிருந்தவரும், தம்முடைய மணவாட்டி வகுப்பாரின் அங்கத்தினர்களாக இருக்கப்போகிறவர்களுடன் இப்போது ஓர் உடன்படிக்கைக்குள்ளாக பிரவேசிப்பவருமாகிய மணவாளனாகிய கிறிஸ்துவின் சார்பாக, உடன்படிக்கைக் கடமைகளுக்குள்ளாக அந்த சபை பிரவேசித்துக் கொண்டிருக்கிறது. இந்த உடன்படிக்கைகளும், ஒப்பந்தங்களும் கர்த்தருடைய மற்றும் திருச்சபையினுடைய சகோதரர்கள் மற்றும் ஊழியக்காரர்கள் மூலமாக செய்யப்படுகின்றன.

நம்முடைய கர்த்தர் தூர தேசத்துக்கு சென்ற காலத்துக்கும், அவர் திரும்பி வந்ததற்கும் இடைப்பட்ட நீண்ட காலப்பகுதியில், கிறிஸ்துவின் திருச்சபையைச் சேர்ந்தவர்கள் என்று அறிக்கை பண்ணினவர்களில் பலரின் தரப்பிலும் கடுமையான விசுவாசமின்மை காணப்பட்டதாக வேத வாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வெளிப்படுத்தலில் இவர்கள் வேசித்தனம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவர்கள் அங்கீகரிக்கப்பட மாட்டார்கள், மாறாக அவருடைய இரண்டாம் வருகையில் முழுமையாக மறுதலிக்கப்படுவார்கள், நிராகரிக்கப்படுவார்கள் என்று நமக்கு உறுதியளிக்கப்–படுகின்றது. ஆனால், கர்த்தருடன் உடன்படிக்கை செய்து கொண்டதாக அறிக்கைசெய்யும் திரளானோர், துரோகம் செய்வார்கள் என முன்னறிவிக்கப்பட்டிருந்தாலும், தம்முடைய வருகையின்போது உலகத்திலிருந்து பிரிந்திருக்கிற, சுத்தமுள்ள, கலப்படமில்லாத, உண்மையுள்ள ஒரு "கன்னிகை" வகுப்பார் இருப்பார்கள் என்று தெளிவாக நம்முடைய கர்த்தர் அறிவிக்கிறார். இந்த வகுப்பாரைக் குறித்தே உவமையானது விவரிக்கிறது. அதோடுகூட, கன்னிகைகள் அனைவருமே மணவாட்டியின் அங்கத்தினர்களாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள் என்பதையும், தூய்மையுடன்கூட, ஒரு குறிப்பிட்ட விழித்திருக்கும் தன்மையும் வைராக்கியமும்கூட இன்றியமையாததாகக் கருதப்படும் என்பதையும் காண்பிக்கிறது.

**பரோஷியா மற்றும் எபிப்பானியா**

இந்த உவமை, மில்லருடைய இயக்கத்தில் தன்னுடைய நிறைவேற்றத்தைக் காணத்தொடங்கியதென, வேதமாணவர்களில் பலர் கருதுகின்றனர், இவ்வியக்கம் 1844ல் ஏமாற்றத்தில் முடிவடைந்தது. அதற்கு சுமார் பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலம் சமீபமாகிவிட்டது என்கிற ஒரு சத்தம் சபைமண்டலம் முழுவதும் தொனித்தது. அனைத்து சபைப்பிரிவினரையும் சேர்ந்த பல நேரிய குணமுடைய மனிதர்கள் இந்தச் செய்தியை நம்பி, தங்கள் விசுவாசத்தின் பலத்தில், மணவாளனைச் சந்திக்கச் சென்றதாக வரலாறு கூறுகிறது. ஆனால் மணவாளன் வரத் தாமதித்ததால் அவர்கள் ஏமாற்றமடைந்தனர்.

பின்னர் புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத அனைத்து "கன்னிகைகளும்" நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டனர். ஒரு பொதுவான மயக்கம், நிச்சயமற்ற தன்மை மற்றும் அரைத்தூக்க நிலை அனைவருக்கும் வந்தது. அவர்களில் சிலர், அந்த நேரத்தில், விநோதமாக கதவு தட்டும் சத்தத்தைக் குறித்துகூட கனவு கண்டார்கள். பின்னர், நள்ளிரவில், மணவாளன் வந்தார், அதற்கேற்ப "இதோ மணவாளன்! அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள்!" எனும் அறிவிப்புகளும் கொடுக்கப்பட்டன.

வில்லியம் மில்லரைப் பின்பற்றுபவர்கள் ஏமாற்றமடைந்து முப்பது ஆண்டுகளுக்குப்பிறகு, அதாவது **1874**இல், இந்தப் பிந்தைய சத்தம் ஒலித்தது என்று அநேக வேத மாணவர்கள் நம்புகிறார்கள். இயேசு மாம்சத்தில் திரும்பி வந்ததாக அவர்கள் கூறுவதில்லை; மாறாக, அவர் ஒருபோதும் மாம்சத்தில் வரமாட்டார் என்றும், அவர் இனி ஒருபோதும் மாம்சமானவர் அல்ல என்றும், அவர் "தாம் முன்பிருந்த இடத்திற்கு ஏறினார்" –தேவதூதர்களைக் காட்டிலும் மேலான –ஆவிக்குரிய தளத்திற்குச் சென்றுவிட்டார் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், அவருடைய பரோஷியாவிற்கும் அவருடைய எபிப்பானியாவிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை வேதாகமம் தெளிவாக வேறுபடுத்திக் காண்பிக்கிறது என்கிற உண்மைக்கு நம்முடைய கவனத்தை இந்த வேதமாணவர்கள் ஈர்க்கிறார்கள். பரோஷியா என்கிற வார்த்தை பிரசன்னத்தைக் குறிக்கிறது. எந்த அர்த்தத்திலும் அது கண்ணுக்குத் தெரிகிற வகையில் பிரசன்னமாகியிருப்பதைக் குறிப்பதில்லை. எபிப்பானியா என்ற வார்த்தை ஏற்கனவே பிரசன்னமாகியிருக்கிறவரை வெளியரங்கமாக்குவதை குறிப்பிடுகிறது. இந்த சுவிசேஷயுகத்தின் முடிவில், கிறிஸ்து மனுஷருடைய கண்களுக்குப் புலப்படாதவகையில் பிரசன்னமாகியிருப்பார் என்றும், குறிப்பாக அவருடைய சபையில் ஒரு வேலையை நிறைவேற்றிக்கொண்டிருப்பார், அது என்னவெனில், ராத்தல் மற்றும் தாலந்துகளின் உவமைகளில் காண்பிக்கப்பட்டுள்ளபடி, உண்மையுள்ளவர்களுக்கு வெகுமதியளித்து, நம்முடைய பாடத்தின் உவமையில் கூறப்பட்டதுபோல், "புத்தியுள்ள கன்னிகைகளை" ஏற்றுக்கொண்டிருப்பார் என்றும் இந்த வேதமாணவர்கள் கூறுகிறார்கள்.

புத்தியுள்ள கன்னிகைகளைப் பிரித்தெடுக்கும் இந்த வேலையின் முடிவில், முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமைவாய்ந்த மறுரூபமாக்குதலின் வாயிலாக அவர்கள் தங்கள் எஜமானருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசித்தபிறகு, இம்மானுயேலின் எபிப்பானியா, வெளியரங்கமாக்குதல் வெளிப்படுத்தப்படும். "அவர் வெளிப்படும்போது நீங்களும்

அவரோடுகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்''(எபே3:4). ''...நீதியாகிய ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு..ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு..வெளிப்படுவார்'' (2தெச1:7,8). வேறு வார்த்தைகளில் கூறுவதானால், உலகத்திற்கு கிறிஸ்து தம்மை வெளிப்படுத்துவது, ''புத்தியுள்ள கன்னிகை'' வகுப்பாருக்கு அவர் தம்மை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து நடக்கும். மாம்சத்தில் இயேசுவைக் காண்பதன் மூலமாக அல்லாமல், மாறாக ''யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலமாகிய'' உலகத்தின்மீது வரப்போதும் மகா உபத்திரவக் காலத்தைக் காண்பதன் மூலமாக, அவர் தம்முடைய மாபெரும் வல்லமையைக் கையில் எடுத்துக்கொண்டு, தம்முடைய நீதியின் ஆளுகையைத் தொடங்கிவிட்டார் என்பதை உலகம் அறிந்துகொள்ளும் –தானியேல் 12:1; மத்தேயு24:21.

**விளக்குகள் மற்றும் எண்ணெய்**

இந்த வேதமாணவர்களின் கருத்துக்கள் நமக்கு ஆர்வத்தைத் தூண்டுவதாக உள்ளன. அவர்களின் அனைத்து முடிவுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், ஏற்கபடாவிட்டாலும், அவை குறைந்தபட்சம் கருத்தில் கொள்வதற்கேனும் தகுதியானவையாக இருக்கின்றன. ஏனெனில் முன்னர் புரிந்துகொள்ளப்படாத சில வேதவாக்கியங்களுக்கு ஒரு புதிய விளக்கத்தை அவர்கள் வழங்குகின்றார்கள். அவர்கள் காலங்களையும் வேளைகளையும் சரியாகப் பிரித்திருக்கிறார்களா என்பது மற்றொரு காரியமாகும். அந்தக் காரியத்தில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய சொந்த நிதானிப்பைப்பயன்படுத்தவேண்டும். இந்த நிலைப்பாட்டிலிருந்து நாம் இந்த உவமையைப் பின்பற்றுவோமாக; ஏனென்றால். உவமையின் விதிமுறைகளையும். நிபந்தனைகளையும் பயன்படுத்த முடிகிற வேறு ஏதாவது காரியம் இருக்கிறதா என்பதை நாங்கள் அறியோம்.

எல்லா ''கன்னிகைகளும்'' ''இதோ மணவாளன்!'' – எதிர்பார்க்கப்பட்டவர் வந்திருக்கிறார் என்கிற செய்தியைக் கேட்கிறார்கள் என்பதை நாம் கவனிக்கவேண்டும். அவர்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் அந்தச் சத்தத்தைக் கேட்பார்கள் என்பது அர்த்தமல்ல – அதற்கு மாறாகவே நடக்கும். அந்தச் ''சத்தம்'' உண்டான காலத்தில், அது நாற்பது வருடங்களாக இருந்தாலும், அதற்கு அதிகமாக இருந்தாலும், அதற்குக் குறைவாக இருந்தாலும், சத்தம் வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் வரையில், அதைக் கேட்பதற்கு வாய்ப்பு இருக்கும். கன்னிகை வகுப்பார் அனைவரும் அதைக் கேட்கவேண்டும்.

சந்தேகத்திற்கிடமின்றி, உவமையில் கூறப்பட்ட ''எண்ணெய்'' பரிசுத்தஆவியையும், ''விளக்குகள் அல்லது தீவட்டிகள்'' வேதாகமத்தையும் குறிக்கின்றன. இந்தக் கன்னிகைகள் அனைவரிடமும் வேதாகமமும், அதிலிருந்து கிடைத்த கொஞ்சம் வெளிச்சமும் இருந்தது; ஆனால், தங்கள் இருதயங்களில் போதுமான அளவிற்கு சத்தியஆவியை வைத்திருப்பவர்களால் மாத்திரமே அதை தக்கவைக்க முடியும். மற்றவர்களுக்கோ விளக்கு மேற்கொண்டு எரியாமல் அணைந்துபோய்விடும். அவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடு தொடர்புடைய வேதாகம தீர்க்கதரிசனங்களைப் புரிந்துகொண்டு, அதனைப் பயன்படுத்துவது நிறுத்தப்படும்.

**பரிசுத்தஆவியைப் பெறுவதற்கான ஒரேஒரு வழி**

''புத்தியுள்ள கன்னிகைகள்'', செய்திக்குப் பதிலளிக்கும் விதமாக தங்கள் விளக்குகளை ஆயத்தப்படுத்தினார்கள் (trimmed), அதாவது, அவர்கள் வேதவாக்கியங்களைஆராய்ந்து பார்த்தனர். பழங்காலத்து பெரேயா பட்டணத்தாரைப் போலவே, இவர்கள் ''காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள்'' (அப்17:11). இதனால், அவர்கள் தங்கள் விளக்குகளில் ஒளியையும், அதோடுகூட அவர்களின் இருதயங்களில் ''எண்ணெயாகிய'' பரிசுத்த ஆவியையும் பெற்றிருந்தார்கள். அப்பொழுது, ''புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி : உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங்கொடுங்கள்'' என்றார்கள். அதாவது, உங்களைப்போலவே நாங்களும் வேதாகம ஆராய்ச்சியில் ஆர்வமாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறோம், ஆனால் இந்த விஷயங்கள் இனிமேலும் எங்களுக்கு ஆர்வமாயிருக்கவில்லை. ஆகவே. உங்கள் எண்ணெயில் (ஆவியை) எங்களுக்குக் கொஞ்சங்கொடுங்கள்! என்பதாகும்.

எவ்வாறாயினும், பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு ஒரே ஒரு வழி உள்ளது. அது கர்த்தரிடமிருந்தும். அவருடைய சொந்த நிபந்தனைகளின்பேரிலுமே கிடைக்கும். எண்ணெய் புதிதாக பெறவேண்டுமானால், கர்த்தருடனான நமது உடன்படிக்கையையும், அவருக்காகவும் சத்தியத்திற்குமான நம்முடைய வைராக்கியத்தையும், நீதியின் கொள்கைகளுக்கான நம்முடைய உண்மைத்தன்மையையும் நாம் நன்றாக கவனிக்கவேண்டும். இதற்கு நேரமும், வேதத்தைக் கற்குதலும் விலையாயுள்ளது. ஒருவேளை, அதற்காக இம்மைக்குரிய இந்த வாழ்க்கையின் விஷயங்களில் சிலவற்றைப் புறக்கணிக்க வேண்டியிருக்கும். இது ஐசுவரியம் மற்றும் புகழுக்காக போராடாமல், அவற்றைக் கைவிடுவதை அர்த்தப்படுத்துகிறது. பிதாவாகிய தேவனுடன் நெருங்கி ஜீவிப்பதை இது அர்த்தப்படுத்துகின்றது.

இவைகளே விலையேறப்பெற்ற எண்ணெயை வாங்குவதற்காக கொடுக்கப்படும் விலையாகும். இந்த எண்ணெய், அதை வைத்திருப்பவர்களுக்கு ஒளியைக் கொடுக்கும். ஆகவே புத்தியுள்ள கன்னிகைகள், 'பரிசுத்தஆவி என்னும் எண்ணெய் தங்களுக்கென்று அளவாகவே இருக்கிறது, அதைக்காட்டிலும் அதிகமாக இல்லை' என்று தெரிவித்தார்கள். பின்னர், சம்பூரணமாய்க் கொடுப்பவரும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடம் செல்லுமாறும், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதன் மூலமும், வேதவாக்கியங்களை ஆராய்வதன் மூலமும் இடுக்கமான

பாதையில் குருவின் வழிகாட்டுதலை நெருக்கமாய்ப் பின்பற்றுவதன் மூலமும் எண்ணெயைப் பெறும்படியும், எண்ணெய் போதாமலிருக்கும் தங்களுடைய சகோதரர்களிடத்தில் அறிவுறுத்தினார்கள்.

**கதவு மூடப்படுதல்**

இதற்கிடையில், இறுதியாக முன்குறிக்கப்பட்ட எண்ணிக்கையில் கடைசி நபர் உள்ளே செல்லும்வரையில், மேற்கொண்டு யாரும் உள்ளே பிரவேசிக்கமுடியாது என்பது வரை, ''புத்தியுள்ள கன்னிகைகளில்''ஒருவர் பின் ஒருவராக–திரையைத்தாண்டி–உள்ளேசென்று கொண்டிருந்தனர். ''அப்போது கதவும் அடைக்கப்பட்டது''–மத் 25:10

முன்பு, நம்முடைய தவறான புரிதலினால் நாம் என்ன நினைத்துக்கொண்டிருந்தோமெனில், புத்தியுள்ள கன்னிகை வகுப்பார் உள்ளே சென்றபின், இந்தக் ''கதவு'' மூடப்படுவதென்பது, எல்லா புத்தியில்லாத கன்னிகைகளும் மற்றும் எஞ்சியிருக்கும் மனுக்குலத்தார் அனைவரும் தேவனுடைய தயவிலிருந்து வெளியேற்றப்படுவதை –நித்திய வேதனைக்கு தள்ளப்படுவதை –குறிப்பதாக நினைத்துக்கொண்டிருந்தோம். இருப்பினும், பிதா யாருக்கு இராஜ்யத்தைக் கொடுப்பதற்குப் பிரியமாயிருக்கிறாரோ, அந்தச் சிறுமந்தையாகிய இராஜ்ய வகுப்பாரை அடுத்து, ''கதவானது'' மூடப்படுவதாக நாம் இப்போது கவனிக்கிறோம். மற்றவர்களால் ஒருபோதும் அந்த இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமுடியாது என்றாலும், தேவன் அவர்களுக்கு மற்ற ஆசீர்வாதங்களை வைத்திருக்கிறார், இவை அனைத்தும் இராஜ்ய வகுப்பாராகிய கிறிஸ்து மற்றும் அவருடைய மணவாட்டியின் மூலமாக வரும்.

பிற்பாடு, புத்தியில்லாத கன்னிகை வகுப்பார் எண்ணெயாகிய பரிசுத்தஆவியை சரியான அளவில் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதையும், அதனால் அவர்களால் தங்களுடைய தீவட்டியிலிருந்து வெளிச்சத்திற்குப் பெறமுடியும் என்பதையும் உவமை காட்டுகிறது; அதாவது, யுகத்தின் முடிவு வந்துவிட்டது என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டு, இராஜ்யத்தின் கதவு தங்களுக்குத் திறக்கப்படவேண்டும் என்று ஆர்வத்துடன் விரும்பி, ஜெபத்தில் ''தட்டுகிறார்கள்'' என்பதைக் காட்டுகிறது. ஆனால் அவர்களுக்கு கர்த்தர் அளிக்கும் பதில், ''என்னால் உங்களை அடையாளம் காணமுடியவில்லை. ஒரே ஒரு மணவாட்டி வகுப்பார் மாத்திரமே உள்ளனர், அவர்களும் ஏற்கனவே என்னிடம் உள்ளே வந்துவிட்டனர்'' என்பதாகும்.

இதைக் கருத்தில் கொண்டவர்களாய், கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் அனைவரும் ஊக்கமாக விழிப்புடன் இருக்கவேண்டும். ஆவியால் நிரப்பப்பட்டு, தங்கள் விளக்குகளை ஒழுங்குபடுத்தி, அதனை எரியச் செய்துகொண்டிருக்க'' வேண்டும். அவருடைய பரோஷியாவின் அர்த்தத்தில், மணவாளன் வரும் நாளையாவது, நாளிகையையாவது ஒருவரும் அறியமாட்டார்கள். இருப்பினும், அவர் வந்தபிறகு, கன்னிகைகள் அனைவரும் அவருடைய பிரசன்னத்தை அறிந்திருக்கவேண்டும். அதைப் பற்றி அறியாத எவருக்கும், எந்த அளவு அறியாதிருக்கிறாரோ அந்த அளவிற்கு, தான் மணவாட்டி வகுப்பாரைச் சேர்ந்தவர் என்பதற்கான ஆதாரம் இல்லாதிருப்பார்கள்; புத்தியில்லாத கன்னிகைகள்கூட மணவாளனுடைய பிரசன்னத்தை அறிந்திருந்தார்களே.

உவமையில் புத்தியில்லாத கன்னிகைகளுக்கு என்ன நேரிடும் என்று கர்த்தர் சொல்லவில்லை; ஆனால் மற்ற வேதவாக்கியங்கள், உலகத்தின்மீது வரவிருக்கும் மகா உபத்திரவக் காலத்தில் குறைந்தபட்சம் ஒரு பகுதியினூடே அவர்கள் கடந்துசெல்லுவார்கள் என்றும், இறுதியாக அவர்கள் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படும்போது, அவர்கள் சிங்காசனத்தில் அமரும் அவருடைய உடன்–சுதந்தரர்களாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள். மாறாக, மணவாட்டியினுடைய கனத்துக்குரிய ஊழியர்களாகவே ஏற்றுக்கொள்ளப்–பட்டிருப்பார்கள். அவர்கள் ''மணவாட்டிக்குப் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள்'' என்று வேறு இடங்களில் பேசப்படுகிறார்கள். மேலும் அவர்கள் இறுதியில் இராஜாவின் முன்னிலையில் கொண்டுவரப்–படுவார்கள் மற்றும் இராஜ்யத்தின் பணியில் ஒரு கீழான பங்கைப் பெற்றிருப்பார்கள்(சங்கீதம் 45:14–16). அதற்கடுத்த வரிசையில் மாம்சீக இஸ்ரயேலரும், பூமியின் சகலகுடிகளும் ஆயிரமாண்டுகள் ஆசீர்வதிக்கப்படுவார்கள், அவர்கள் பாவம் மற்றும் மரணத்திலிருந்து நீதிக்கும் நித்திய ஜீவனுக்கும் உயர்த்தப்படுவார்கள் – அல்லது இதில் தவறுவார்களானால் மாற்றமுடியாத அழிவை இரண்டாம் மரணத்தில் அடைவார்கள். இதிலிருந்து எந்த மீட்பும் இல்லை.

––––––––––

**R 3007**

## உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக!

### THY WILL BE DONE

என் தேவனே, உமது சித்தமே, என்னுடையது அல்ல,
உமது சித்தமே செய்யப்பட வேண்டுமே. உமது அன்பு
எனக்காக எத்தகைய பாதையைத் தெரிந்தெடுத்துத் தந்தாலும்,
பாலைவனத்தினூடேயானாலும்,மணற்பாங்கான
பகுதியிலானாலும், கடலுக்கு அருகிலே இருந்தாலும்,
உம்முடைய சித்தமே செய்யப்படவேண்டுமே.

உம்முடைய சித்தம் என்னிலே நிறைவேற்றப்படவேண்டுமே,
அறுவடைவேலை எனக்குக் கொடுக்கப்படுவது
உமது சித்தமானால், அல்லது நான் பாடுபடவேண்டும் என்பது
உமக்கு சித்தமானால், உம்முடைய சித்தம்
செய்யப்படவேண்டுமே.

என் தந்தையே, உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக!
நான் குடிப்பதற்காக நீர் இனிமையான பாத்திரம் அளித்தாலும்,
நான் குடித்திடுவேன், உம்மைப் புகழ்ந்திடுவேன்,
அது கசப்பானதாய் இருந்தால் நான் சுருங்கிட மாட்டேன்,
அருந்திடுவேன், உம்மைப் புகழ்ந்திடுவேன், உம்முடைய சித்தம்
செய்யப்படுவதாக!

என்றென்றைக்கும் உம்முடைய சித்தம் செய்யப்படவேண்டுமே,
நான் தெரிந்தெடுக்கமாட்டேன், உம்முடைய பொறுப்பிலேயே
எல்லாவற்றையும் விட்டுவிட்டேன், யாத்திரை மிகவும்
குறுகியதானாலும், நெடும்தூரப் பயணமானாலும்
உம்முடைய சித்தம் மட்டுமே செய்யப்படவேண்டுமே!

––––––––